உதயன்

ரூபா 8.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 22 வெள்ளிக்கிழமை (06-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:191

www.uthayan.com


# இணைந்துள்ள வடக்கு - கிழக்கு தனித்தனி மாகாணங்களாகுமா?

## ஜனாதிபதி வாக்குறுதி அளித்தார் என்று தேசிய பிக்குமார் சங்கத்தினர் தகவல்

கொழும்பு,ஜூன்6

**பதினாறு வருடங்களுக்கு முன்னர் இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்கள் ஆக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கு உறுதி அளித்திருக்கிறார் என்று அவரைச் சந்தித்துப் பேசிய தேசிய பிக்குமார் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கிறார்கள்.**

பிக்குமார் சங்கம் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அவர்களுக்கு வழங்கக்கூடாது என்பது உட்படப் பல்வேறு விடயங்களை வற்புறுத்தியது.

அப்போது, புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு, தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு இடைக்கால நிர்வாக அமைப்பில் சிங்கள, முஸ்லிம், தமிழ் சமூகப் பிரதிநிதிகளும் இடம்பெறச் சம்மதிப்பார்களானால் மட்டுமே இடைக்கால நிர்வா

(13ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் நகைக் கடையில் மற்றோர் இளைஞனின் சடலம்!

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.நகரில் நகைக் கடை ஒன்றில் இரவு படுக்கைக்குச் சென்ற நகைத் தொழிலாளி ஒருவர் அதிகாலையில் சடலமாகக் காணப்பட்டார்.

நல்லூரில் வசித்துவரும் மண்கும்பானைச் சேர்ந்த பாலச்சந்திரன் ராகவன் (வயது 19) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தனது நண்பர்களுடன் நேற்றுமுன்தினம் இரவு நகைக்கடை மேல் மாடியில் படுக்கைக்குச் சென்ற இவரை, அதிகாலையில் சக நண்பர்கள் எழுப்பிய போது அவர் சடலமாக காணப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக உடனடியாக யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டது. பொலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். நகைக்கடைக்கு வந்து சடலத்தைப் பார்வையிட்ட யாழ் மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம்,

(14ஆம் பக்கம் பார்க்க)



அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஜெனீவா தலைமையக அதிகாரி நேற்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்த சமயம் எடுக்கப்பட்ட படம்.

## தமிழ் மாணவர்களின் எழுச்சி தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்6

'நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்' எனும் பொதுக் கோஷத்துடன் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று குடாநாடெங்கும் உணர்வுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலாவதாக வீரச்சாவடைந்த மாவீரர் பொன்.சிவகுமாரனின் நினைவிடம் அமைந்திருக்கும் உரும்பிராய் சந்தி, யாழ்.மாவட்ட முன்னாள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மாவீரர் மேஜர் முரளி வீரச்சாவடைந்த உரும்பிராய், முந்திரிச் சந்தி ஆகிய இடங்கள் உட்பட ஆறு இடங்களில் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நிகழ்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக எழுச்சி ஊர்வலங்களும் இடம்பெறவுள்ளன. ஊர்வலங்கள் நிறைவுற்றதும் எழுச்சி உரைகள் இடம்பெறும் மாலையில் கலை நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கும் வைபவங்களும் நடைபெறவுள்ளன.

எழுச்சி நாளை ஒட்டி பொன்.சிவகுமாரனின் உருவப்படம் பொறித்த வர்ணப் போஸ்டர்கள் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன. சிவகுமாரனின் உருவப்படத்துடன் கூடிய கொடிகள் வாகனங்களில் பறக்க விடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோ செல்ல முடியாமற் போனதற்கான முழுப் பொறுப்பையும் அரசுதான் ஏற்கவேண்டும்!

### ஐ.நா.பிரதிநிதியிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்6

ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ள முடியாமற் போனமைக்கான பொறுப்பை ஸ்ரீலங்கா அரசுதான் ஏற்க வேண்டும்.

- விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். கிளிநொச்சியில் நேற்று தம்மைச் சந்தித்த அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் ஜெனிவா தலைமையக இரண்டாவது அதிகாரியான காமல் மொஜானியிடம் தமிழ்ச்செல்வன் இதனைக் கூறினார்.



அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல்ரைட் மற்றும் தமது அலுவலகத்தின் அதிகாரிகள் சகிதம் நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்த காமல் மொஜானி அரசியல்துறை நடுவப் பணியகத்தில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடினார்.

ரோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் நிச்சயம் பங்குபற்ற வேண்டும். அதன் மூலம் கூடுதல் நிதியை வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு பெறமுடியும் என்று மொஜானி தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்.

இதுவரை நடந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை என்று தமிழ்ச்செல்வன் அப்போது அவரிடம் சுட்டிக்காட்டினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்ற பிரதமர் ரணில் ஜப்பான் பயணம்

கொழும்பு,ஜூன்6

ஜப்பானின் ரோக்கியோவில் எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க இன்று அதிகாலை ஜப்பானுக்குப் புறப்பட்டுச் செல்வார்.

ரோக்கியோவிலுள்ள 'அகசகா பிரின்ஸ்' ஆடம்பர ஹோட்டலில் நடைபெறும் இம்மாநாட்டில் பங்குபற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவினருக்கு பிரதமர் தலைமை வகிப்பார்.

ஒஸாகா சர்வதேச விமான நிலையத்தை இன்று சென்றடையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் தனிப்பட்ட பயணமொன்றுக்காக ஹிரோஷிமா நகருக்குச் செல்லவிருக்கின்றனர்.

ஹிரோஷிமாவிலிருந்து ரோக்கியோ

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர்கள் இருவர் கைதாகி விளக்கமறியலில்!

திருகோணமலை,ஜூன்6

திருகோணமலை பாலம்போட்டாறு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு படையினரால் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு இரத்தினசிங்கம் உதயகுமார், இராசையா சிவஞானம் ஆகியோரே படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று கடற்படையினர் ஊடாக திருமலை துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் நேற்றுப் பிற்பகல் மாவட்ட நீதிபதி அன்ரன் பாலசிங்கத்தின் முன் ஆஜர்செய்யப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

(ஐ-12)


தேசிய சேமிப்பு வங்கி வழங்கும் வீடமைப்புக் கடன்

- 12%, 13%, 14% கவர்ச்சியான வருடாந்த வட்டி.
- 30 ஆண்டுகள் நீடித்த கடன் மீள் செலுத்தும் காலம்.
- கடனை திரும்பச் செலுத்துவதற்கான ஆகக்கூடிய வயது 65 ஆகும்.
- மறைமுக நிபந்தனைகளோ கட்டணங்களோ இல்லை
- தலைமையகத்தில், 4 நாட்களில் கடன்களைப் பெறும் "துரித சேவை" வசதி

எனது வீடு கட்டும் கனவு நனவாகியது

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# நோர்வூட் வெஞ்சர் தோட்டத்தில் மோதல்: ஒருவர் பலி; இரு வீடுகள், ஒரு வான் எரிப்பு!

## இரு சங்கங்களின் ஆள்திரட்டலின் போது தகராறு

கொழும்பு,ஜூன்6

நோர்வூட், வெஞ்சர் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் மாலை இரண்டு கட்சிகளின் தொழிற் சங்கங்களுக்கு நடந்த ஆள்திரட்டலின் போது ஏற்பட்ட தகராறில் ஒருவர் பலியானார்; இரண்டு வீடுகளும் ஒரு வானும் தீச்சிரையாக்கப்பட்டன.

பெரியசாமி சண்முகநாதன் என்ற 24 வயது இளைஞரே பலியானவராவார்.

கடந்த புதன்கிழமை நோர்வூட், வெஞ்சர் தோட்டத்தில் இ.தொ.கா., இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவை ஆட்சேர்க்கும் படிவங்களை விநியோகித்தன. அப்போது ஏற்பட்ட வாய்த் தர்க்கம், பின்னர் கைகலப்பாக மாறியது. இதில் இ.தே.தோ.தொ.ச. கட்சி உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டு மரணமானார்.

இதனால் மூண்ட மோதலில் இரண்டு வீடுகளும் ஒரு வானும் தீ வைக்கப்பட்டன. நேற்று நண்பகல் வரை அப்பிரதேசத்தில் பதற்றமான நிலை இருந்தது. இச்சம்வத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

# மயானப் பிரச்சினையால் இரண்டு ஊர் மக்கள் மாறி மாறித் தாக்குதல்!

## பல வீடுகள் சேதம்; மூவர் காயம்!!

மட்டக்களப்பு,ஜூன்6

மட்டக்களப்பு ஐயங்கேணி மயானத்தில் பிரேதம் ஒன்றைப் புதைத்ததில் ஏற்பட்ட தகராறை அடுத்து பல வீடுகள் தாக்கி சேதமாக்கப்பட்டன. இதில் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஐயங்கேணியில் உள்ள மயானத்தில் ஏறாவூர் 4 ஆம் குறிச்சியைச் சேர்ந்த மக்கள் ஒரு பிரேதத்தை புதைத்தனர்.

இந்த மயானம் மக்கள் செறிந்து வாழும் இடத்தில் இருப்பதால் வேறு ஓரிடத்தில் மயானம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த இடத்தில் புதைக்க வேண்டாம் எனக் கூறி ஐயங்கேணி பிரதேசவாசிகள் பிரேதத்தைத் தோண்டினர். இச்செயலால் ஆத்திரமுற்ற ஏறாவூர் 4 ஆம் குறிச்சி பிரதேச வாசிகள் கோஷ்டியொன்று அன்று மாலை ஐயங்கேணி பிரதேசத்தில் புகுந்து பல வீடுகளைத் தாக்கியது. மூவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் கால் முறிந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஐயங்கேணி பிரதேச வாசிகள் கோஷ்டியொன்று ஏறாவூர் 4 ஆம் குறிச்சிக்குச் சென்று அங்கிருந்த வீடுகளைத் தாக்கியுள்ளது.

இது தொடர்பாகப் பொலீஸார் தீவிர விசாரணை செய்து வருகின்றார்.

# அமெரிக்க அதிகாரிகள் நேற்று யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்6

குடாநாட்டில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக அமெரிக்க அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

அமெரிக்காவின் யு.எஸ்.நிறுவனத்தின் பிரதி நிர்வாகியான பெற்றிக் டபிள்யூ ஷிக் மற்றும் அந் நிறுவன அதிகாரிகளான கரோல் பெச்சர், யஸ்ரின் போமன், ஜெசிக்கா டேமி, வைக் டிகிரி, அமெரிக்க தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரி கிறிஸ் லோங் ஆகியோர் அடங்கிய குழுவே யாழ்ப்பாணம் வந்தது.

யாழ்ப்பாணத்தில் தமது நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனுடன் குழுவினர் கலந்துரையாடினர்.

குடாநாட்டில் குறுகிய காலக்கடன் வழங்குவது தொடர்பாக குழுவினர் விரிவாக ஆராய்ந்தனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிலையம் ஆகியவற்றுக்கும் இவர்கள் விஜயஞ்செய்தனர். பல பிரமுகர்களையும் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். (ஐ-3-6)

# கைதடி சிறுவர் இல்லத்தை மீள இயக்க இந்து சமயப் பேரவைக்கு அனுமதி

## விடுதிப் பொறுப்பாளருக்கும் பிணை கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஜூன்6

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதிப் பொறுப்பாளர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த வழக்கின் சந்தேக நபர்கள் தவிர்ந்த இந்து சமயப் பேரவையின் ஏனையோர் சிறுவர் இல்லத்தை மீளத திறந்து இயக்குவதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

சிறுவர் இல்ல விவகாரம் தொடர்பான வழக்கு சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம், விடுதிப் பொறுப்பாளரான தர்மராஜதுரையை பிணையில் விடுமாறு கோரி அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.சபாநாதன் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

தர்மராஜதுரையை 35 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் இரண்டு ஆள்பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பிரதி சனிக்கிழமைகளில் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் என்றும் நீதிமன்றம் அவரைப் பணித்தது.

இந்த வழக்கின் சந்தேகநபர்களான இந்து சமயப் பேரவையின் செயலாளர் எஸ்.சக்திகிரீவன், விடுதிப் பொறுப்பாளர் தர்மராஜதுரை மற்றும் இரு பணியாளர்களும் தமது உடைமைகளை சைவச்சிறுவர் இல்லக்கட்டடத்தில் இருந்து மீளப்பெறுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பிரஸ்தாப நால்வரையும் தவிர இந்து சமயப் பேரவையைச் சேர்ந்தோர் சைவச் சிறுவர்இல்லத்தை மீள இயக்குவதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது. (ஐ-3)

### மஹரகமவில் இருவர் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஜூன்6

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் இருவர் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

'டொல்பின்' ரக வான் ஒன்றில் வந்தோர் அவர்களைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர் என்று மஹரகம பொலீஸார் தெரிவித்தனர்.

நிஹால், சுசில் எனப் பெயருடைய இவ்விருவரும் மோட்டார் சைக்கிளில பயணம் செய்து கொண்டிருக்கையில் சுடப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

கொல்லப்பட்ட இவர்களின் சடலங்கள் களுபோவில வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

### ஐ.தே.க. அமைப்பாளர் வெட்டிக் கொலை!

கொழும்பு,ஜூன்6

மாவத்தகம, மலன்தெனிய பகுதியில் ஐ.தே.க. பிரதான அமைப்பாளராகச் செயற்பட்ட பி.எம்.குலதுங்க என்பவர் நேற்றுமுன்தினம் இரவு வெட்டிக் கொல்லப்பட்டார்.

பலமாக வெட்டி காயப்படுத்தப்பட்ட அவர், வீதியில் விழுந்து கிடக்கையில் கண்டு பிடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவர் அங்கு மரணமானார்.

இவர் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆதரவாளராவார். இத்தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை.

### கல்விக் கல்லூரிகளில் பயிற்சிமுடித்த

# கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு சொந்த மாவட்டத்திலேயே நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடக்கு - கிழக்கில் உள்ள கல்விக் கல்லூரிகளில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய 168 கல்வி டிப்ளோமா தாரிகளுக்கும் அவர்களது சொந்த மாவட்டங்களில் நியமனம் வழங்க உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராசா, திட்டமிடல் பணிப்பாளர் விஜயரத்தின ஆகியோருடன் இது பற்றி கலந்துரையாடியதாகவும் -

அதன் பயனாக மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டு அது வடக்கு - கிழக்கு பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் - மகாசிவம் தெரிவித்தார்.

மேற்படி மாணவர்களில் வேறு மாவட்டங்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட சுமார் 90 பேர் தமது நியமனத்தை மீளாய்வு செய்யுமாறு கோரி விண்ணப்பித்துள்ளனர்.

அவர்களுக்கு அவர்களது சொந்த மாவட்டத்திலேயே இன்னும் இரு வார காலத்துக்குள் நியமனம் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை மீளாய்வுக்கு விண்ணப்பிக்காதவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்து நிவாரணம் பெற முடியம் என்றும் மகாசிவம் தெரிவித்தார். (ஐ-3)

# உள்ளூராட்சி திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிரான மனு மீது இன்று விசாரணை

கொழும்பு,ஜூன்6

நாடாளுமன்றத்தில் அரசு சமர்ப்பித்திருக்கும் உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மனுவை உயர் நீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்.

வடக்கு, கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நியமனப் பத்திரங்களை ரத்துச் செய்துவிட்டு புதிதாக நியமனப் பத்திரங்களை தேர்தல் ஆணையாளர் கோர இச்சட்ட மூலம் வழி செய்யவிருக்கிறது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, ஸ்ரீயானி பண்டாரநாயக்க, அசோக டி சில்வா ஆகிய மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் இம்மனு விசாரணை செய்யப்படவிருக்கிறது.

முன்னைய நியமனப்பத்திரங்களை ரத்துச் செய்து விட்டு புதிய நியமனப் பத்திரங்களை கோர தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தை மீறுவதாக அமைந்திருக்கிறது என்று மனுதாரர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

# புலிகள் இரு நிபந்தனைகளை நிறைவேற்றினால் இடைக்கால நிர்வாகம் வழங்க எதிர்ப்பில்லை

## மகா சங்கத்தினரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்

கொழும்பு,ஜூன்6

விடுதலைப் புலிகள் கோருவது போன்ற இடைக்கால நிர்வாகத்தை வழங்க தான் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

உத்தேச இடைக்கால நிர்வாகத்துக்கு எதிராக மகஜர் ஒன்றைக் கையளிக்க ஜனாதிபதியை வந்து சந்தித்த மகா சங்கத்தினரிடமே ஜனாதிபதி இதனைக் கூறியிருக்கிறார் என ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இடைக்கால நிர்வாகத்தையோ அல்லது வடக்கு, கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையையோ வழங்குவதை தான் எதிர்க்கவில்லை என ஜனாதிபதி அங்கு கூறினார். ஆயினும் அவ்வாறான இடைக்கால நிர்வாகத்தை வழங்க விடுதலைப் புலிகள் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் இருக்கின்றன எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அவ்வாறான ஓர் இடைக்கால நிர்வாக சபையை வழங்க வேண்டுமானால் விடுதலைப் புலிகள் நிச்சயமாக ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் எனவும் தனி நாட்டுக் கோரிகையை கைவிட வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

அவ்வாறே, இந்த இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் புலிகள் மட்டுமன்றி வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களினதும் சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும் எனவும் ஜனாதிபதி சொன்னார்.

இந்த இடைக்கால நிர்வாக யோசனையை தான் முன்வைத்தபோது நாட்டில் யுத்தம் நிலவியதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, புளொட், ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ள தான் நடவடிக்கை எடுத்தார் எனவும் சொன்னார்.

ஆயினும், விடுதலைப் புலிகள் கோருவது அவ்வாறான ஓர் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு அல்ல எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, அவர்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதியே அது எனவும் கூறினார்.

இவ்வாறு ஜனாதிபதி செயலக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (ஐ)

### ராக்கம்மாவுக்கு மட்டும் பிணை வழங்க உத்தரவு

# பாலபிரசன்னா உட்பட மூவருக்கு பிணை வழங்க கோரும் மனு தள்ளுபடி!

சென்னை,ஜூன்6

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் இலங்கை மாணவன் பாலபிரசன்னா, சோலைமலைத் தேவர், காவலாளி வீரண்ணன் ஆகியோருக்கு பிணை வழங்கக்கோரும் மனுவை சென்னை மேல் நீதிமன்றம் நிராகரித்திருக்கிறது.

சோலைமலைத் தேவரின் மனைவியான ராக்கம்மாவை மட்டும் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இக்கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இவர்கள் அனைவரும் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தங்களைப் பிணையில் விடுவிக்கக் கோரி இவர்கள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். "இக்கொலை வழக்கிற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனவே, எங்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும். நீதிமன்றம் எந்த நிபந்தனை விதித்தாலும் ஏற்க தயாராக இருக்கிறோம்" என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணை செய்த சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி ராமமூர்த்தி, சோலைமலைத் தேவரின் மனைவி ராக்கம்மாவை மட்டும் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். ஏனையோருக்கு பிணை வழங்க முடியாது என்று மனுவை நிராகரித்தார்.

### சாந்தனின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்6

எழுத்தாளர் ஐ.சாந்தனின் 'தொடர்ந்திருத்தலும், சரிய பொருட்களும்' கவிதைத் தொகுதி அறிமுக விழா நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூ.சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக மொழியியல் துறை வருகை விரிவுரையாளர் வ.சிவராசசிங்கம் தலைமைவகிப்பார்.

நூலின் ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆங்கிலத் துறை விரிவுரையாளர் வை.சுந்தரேசன், முகாமைத்துவத்துறை வருகை விரிவுரையாளர் பொன்.பூலோகசிங்கம் மற்றும் ஆங்கில போதனாசிரியர் ஆ.சுந்தையா ஆகியோர் நிகழ்த்துவர்.

# கண்ணி அகற்றும் பயிற்சியை புதிய அணி நிறைவு செய்தது

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அமைப்பின் 39 பேர் கொண்ட புதிய அணியொன்று தனது பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளது.

இவர்களுக்கான பட்டமளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நேற்று மாலை 4 மணியளவில் பரந்தனிலுள்ள அந்த அமைப்பின் பயிற்சி முகாமில் மனித நேய கண்ணிவெடியகற்றும் அமைப்பின் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது.

சர்வதேச தரத்திலான பயிற்சிகளை பெற்றுவெளியேறியுள்ள இந்த அணியினர், நவீனரக உபகரணங்களை கையாண்டு தமது பணிகளை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை இடம்பெற்ற இந் நிகழ்வில் என்.பி.ஏ., எம்.ஏ.ஜி. மற்றும் டென்மார்க் கண்ணிவெடியகற்றும் குழுவின் பிரதிநிதிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை சேர்ந்த யோகனும் கலந்துகொண்டிருந்தனர்.

டென்மார்க் நாட்டு கண்ணிவெடியகற்றும் குழுவின் ஆதரவுடன் இந்த அமைப்பினர் பூநகரிப் பகுதியில் தமது பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வீதி அபிவிருத்திக்கு கண்ணிவெடி அகற்றி கொடுப்பதற்கென உருவாக்கப்பட்ட 20 பேர் கொண்ட சிறப்பு அணியும் தனது பயிற்சிகளை நிறைவு செய்து கொண்டது. இந்த விசேட அணிக்கான சான்றிதழ்களும் நேற்றைய வைபவத்தின் போது வழங்கப்பட்டன.

இதேவேளை -

மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் மீட்கப்பட்ட 3 ஆயிரம் வெடிபொருள்கள் இன்று இயக்கச்சிப் பகுதியில் வைத்து அழிக்கப்படவுள்ளன. (ஐ-9)

# சூகியை விடுவிக்க ஐ.நா.கோரிக்கை

ரங்கூன்,ஜுன்6

மியான்மரில்(பர்மா) இராணுவ அரசினால் கைது செய்யப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவியும் ஜனநாய கவாதியுமான ஆங்ஷான் சூகியை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

இது விடயமாகப் பேசுவதற்காக ஐ.நா. விசேட தூதுவர் ரஸாலி இஸ் மாயில் வார இறுதியில் மியான்மருக் குச் செல்லவுள்ளார். சூகியை பார்ப் பதற்கு தான் அனுமதிக்கப்படலாம் என்று விசேட தூதுவர் எதிர்பார்த் துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்ன ரும் இராணுவ அரசினால் சூகி நீண்ட காலம் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது ஐ.நாவின் விசேட தூதுவரே ஆட்சியாளர்களு டன் தொடர்ச்சியாகப் பேசி - கடும் முயற்சிகளுக்குப் பின்னர் - அவரை விடுவித்தனர்.

இப்போதும் சூகி இராணுவ ஆட்சி யாளர்களால் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்த இஸ்மாயில், அவா ஏன் கைது செய்யப்பட்டார் என்பதற் குக் காரணம் தெரியவில்லை என்றார்.



கட்டாரில் உள்ள அமெரிக்கப் படைகளின் கூட்டுத் தலைமையகத்துக்கு நேற்று விஜயம் செய்த அதிபர் புஷ் அங்கு படையினரைச் சந்தித்து உரையாடி னார். அவர்கள் மத்தியில் உரைநிகழ்த்துகையில் ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்களைத் தேடும் வேட்டை மேலும் தீவிரமாகத் தொடரும் என்றார். இதற்கிடையில், ஈராக்கின் புலூஜா நகரில் அமெரிக்கப் படையினர் மீது நடத் தப்பட்ட கிரனேட் லேஞ்சர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் ஐவா காயமடைந்தனர். சதாம் ஆதரவுப் படையினரே இதனைச் செய்ததாகக் கூறப்படுகின்றது.

# உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

மட்றிட்,ஜுன்6

ஸ்பெயினில் நேற்றுமுன்தினம் இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத் துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 19ஆக உயர்ந்துள்ளது. மேலும் 40பேர் காயமடைந்துள்ளனர்.

இதற்கு மேலும் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு சாத்தி யக்கூறுகள் இல்லை என்று நாட்டின் ரயில்வே நிறுவன தலைவர் குரோ ஸினி தெரிவித்தார்.

நேருக்கு நேர் மோதி மோச மாகச் சிதைந்த ரயில் பெட்டிகளின் இடையில் இருந்து மீட்புப் பணியாளர் கள் மேலும் சில சடலங்களை மீட்டுள்ளனர்.

விபத்து நடந்த இடத்தை பிரதமர் ஜோஸ் மரியா அன்ஸர் நேரில் சென்று பார்வையிட்டார். (ம)

# ஜேர்மனியத் தம்பதியர் மீது இந்தோனேஷியாவில் தாக்கு!

ஜகார்த்தா,ஜுன்6

இந்தோனேஷியாவின் ஆச் மாநி லத்தில் முஸ்லிம் தீவிரவாதிகளுககு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படைகள் ஜேர்மனியத் தம்பதிகளைச் சுட்டுள்ளனர். இதில் கணவர் உயிரிழக்க மனைவி படுகா யங்களுடன் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

தீவிரவாதிகளுடன் நடந்த சண் டைக்கு இடையில் இவர் படையின ரால் சுடப்பட்டதா இராணுவம் கூறு கின்றது. ஜேர்ம , தம்பதிகள் இரு வரும் சுற்றுலாப பயணிகள் விஸா வில் வந்திருந்ததாகவும், அவர்கள் எப்படியோ சண்டை நடைபெறும் இடத் துக்குள் அகப்பட்டுக் கொண்டதாக வும் இராணுவப் பேச்சாளர் தெரிவித் தார்.

இறந்த ஜேர்மனிய நபர் அடை யாளம் காணப்பட்டதாக இராணுவத் தளபதி ரமோனோ உள்ளூர் வானொ லிக்குத் தெரிவித்தார். 45 வயதான லூதர் ஹென்றிக் அல்பேர்ட் என்பவரே இறந்தவர் என்றும் அவர் சொன்னார்.

இது பற்றிய விசாரணைகளை இரா ணுவம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்கிடையில், ஜேர்மன் தம்ப தியர் சண்டையின் போது சுட்டுக் கொல் லப்படவில்லை என்றும், சந்தேகத்துக் கிடமான வீடு ஒன்றைப் படையினர் சோதனையிட்டபோது இவர்கள் சுட் டுக் கொல்லப்பட்டனர் என்றும் மற் றொரு தகவல் தெரிவித்தது. (ம)

# படையினர் பஸ் மீது தற்கொலைத் தாக்கு!

## செச்சினியா அருகே 16 பேர் பலி!

குறொஸ்னி,ஜுன்6

**ரஷ்யா - செச்சினியா எல்லையில் ரஷ்யப் படை யினர் பயணம் செய்துகொண்டிருந்த பஸ் மீது நேற்று தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டனர்; 12 பேர் காயமடைந்தனர். பெண் தற்கொலை யாளி ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**செச்சினிய எல்லையோரம் உள்ள மொஸ்டொக் என்ற நகரத்தின் அருகிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.**

பஸ்ஸில் ரஷ்ய விமானப் படை யினரும் பொதுமக்களும் இருந்த தாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த பஸ் ரயில்வேக் கடவை ஒன்றை மெதுவாகக் கடந்து சென்ற கொஞ்ச நேரத்தில் நடந்து வந்த பெண் ஒருவர் தன்னைத்தானே வெடிக்க வைத்து தாக்குதல் நடத் தினார் என்று ரஷ்ய பாதுகாப்புப் பேச சாளர் தெரிவித்தார்.

செச்சினியாவில் முஸ்லிம் தீவிர வாதிகளுக்கு எதிராகப் போராடி வரும் ரஷ்யப் படைகளின் தலைமை இடமாக மொஸ்டொக்கே இருக்கின்றது.

மொஸ்டொக்கில் இருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஓர் இடத்தில் இருந்து வந்து கொண்டி ருந்த அந்த பஸ்ஸில் ரஷ்ய விமா னப் படையினர் 30 பேரும் பயணி கள் சிலரும் இருந்துள்ளனர்.

தாக்குதல் இடம்பெற்றதும் ஐவர் அந்த இடத்திலேயே இறந்துள்ளனர். ஏனையவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் உயி ரிழந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் அடிக்கடி இரா ணுவ வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதால் அவற்றில் பொதுமக் களை ஏற்றக்கூடாது என்று கண்டிப் பான உத்தரவு இடப்பட்டுள்ளது. எனி னும், அதனை மீறி பொதுமக்கள் அந்த பஸ்ஸில் பயணம் செய்துள் ளனர். தற்கொலைத் தாக்குதல் நடத் திய பெண் மருத்துவ ஊழியர் போன்று இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

செச்சினியத் தீவிரவாதிகளுடன் அரசியல் தீர்வு ஒன்றுக்கு வருவது தொடர்பான நடவடிக்கைகளுக்கு ரஷ்ய நாடாளுமன்றம் அனுமதி அளித்து ஒரு நாள் கடந்த நிலை யில் இந்தத் தற்கொலைத் தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது. (ம)



ஜோர்டானில் இஸ்ரேலிய - பலஸ்தீனப் பிரதமர்களுடனான சமாதான மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு அமெரிக்க அதிபர் புஷ் கட்டார் நாட்டுக்கு சென்றார். அங்கு அமெரிக்க படைத் தலைமையகத்தில் ஜெனரல் ரொனிபிராங்கிளினைச் சந்தித்தார்.

# பாப்பரசர் ஜோன் போலின் 100ஆவது வரலாற்று விஜயம்

ரிஜிக்கா(குரோஷியா),ஜுன்5

போப்பாண்டவர் இரண்டாவது ஜோன் போல் வரலாற்றுச் சிறப்பு மிக்க தனது 100ஆவது வெளிநாட்டு விஜயத்தை முன்னாள் சோவியத் நாடான குரோஷியாவுக்கு மேற்கொண்டுள்ளார்.

ஐந்து நாள் விஜயமாகப் புறப்பட்டுள்ள பாப்பரசர், நேற்று கடற்கரை நகரான ரிஜிக்காவுக்கு நேற்று வியாழனன்று வந்து சேர்ந்தார். அவர் இங்கு தங்கியிருக்கும் போது ஐந்து நகரங்களுக்கு விஜயம் செய்வார்.

குரோஷியாவில் 80 சதவீதமானவர்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். பாப்பரச ரின் விஜயத்தின்போது ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டிருந்தனர். பாப்பர சரின் விஜயத்தை ஒட்டி ஏற்கனவே நாடு பெரும் விழாக்கோலம் பூண்டி ருந்தது. பாடசாலைகள் மற்றும் கடைகள் அனைத திலும் பாப்பரசரின் உரு வப் படங்கள் ஒட்டப்பட் டிருந்தன. பாதுகாப்பு ஏற் பாடுகளும் இறுக்கப்பட் டுள்ளன. பாப்பரசரின் விஜ யத்தை ஒட்டி நகரத்துக்கான போக்குவரத்துக்களும் மட்டுப்படுத்தப்பட் டுள்ளன. குரோஷியாவுக்கு பாப்பரசர் விஜயம் செய்வது இது மூன்றாவது தடவை. சுதந்திர நாடாகப் குரோஷியா பிரகடனப்படுத்திக் கொண்ட நான்கு ஆண்டுகளின் பின்னர் 1994ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் 1998ஆம் ஆண்டிலும் பாப்பரசர் இங்கு விஜயம் செய்துள்ளார். (ம)



# மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தத்தில் ஷெரோன் - அபாஸ் நேற்று கைச்சாத்து!

அக்கபா,ஜுன்5

வன்முறைகளைக் கைவிட்டு பலஸ் தீன சுதந்திர அரசு உருவாவதற்கு பலஸ்தீன மற்றும் இஸ்ரேலியப் பிரத மர்கள் இணங்கியுள்ளனர். அமெரிக்க அதிபர் புஷ்ஷின் முன்பாக அவர்கள் இந்த இணக்கத்துக்கான ஒப்பந்தத் தில் கைபெழுத்திட்டனர். இதன் மூலம் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் ஏற் பாட்டில் ஜோர்டானின் கடற்கரையோர நகரில் நடந்த இரு நாட்டுத் தலை வர்கள் இடையிலான பேச்சுக்களின் பின்னர் இந்த இணக்கம் எட்டப்பட் டது.

கடந்த 32 மாதங்களாகத் தொடர்ந்து வந்த இரத்தக்களறிக்கு முடிவுகட்டும், அமெரிக்கா தலைமையில் தயாரிக்கப் பட்ட சர்வதேச ஒப்பந்தத்தில் இஸ் ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனும் பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் அபா ஸும் நேற்றுக் கைபெழுத்திட்டனர்.

இந்த இணக்கத்தை எட்டுவதற்கு புஷ் தலைமையில் ஜோர்டானில் நடந்த மாநாடு பெரும் பங்களிப்பு வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் இந்த சர்வதேச சமாதான ஒப்பந் தத்தில் கைபெழுத்திட்டதன் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான அனைத்துத் தாக்குதல்களையும் பலஸ்தீனர் கள் நிறுத்தியாக வேண்டும். ஆனால், இஸ்ரேலியர்கள் ஏதாவது தாக்குதல் நடத்தினார்களோயானால் நிச்சயமா கத் தாமும் திருப்பித் தாக்குவோம் என்று பலஸ்தீனத் தீவிரவாதக் குழுக் கள் தெரிவித்துள்ளன.

மத்திய கிழக்கு சமாதான ஒப்பந் தத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் கைபெழுத்திட்டதும் செய்தியாளர்க ளிடம் பேசிய அதிபர் புஷ், "இந்தப் பயணம் மிகவும் சிக்கலானது என்று தெரியும். ஆனாலும், இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வு காண்பதற்கு எனக்கு வேறு வழியில்லை" - என்றார்.

தற்போது கைபெழுத்திடப்பட் டுள்ள சமாதான ஒப்பந்தத்தின்படி 2005ஆம் ஆண்டளவில் சுதந்திர பலஸ்தீன நாடு உருவாக வேண்டும். அதற்கு முன்னர் இரு தரப்பினரும் தமது வன்முறைகளைக் கைவிட வேண்டும். (ம)



ஜோர்டான் கடற்கரை நகர வாஸஸ்தலம் ஒன்றில் இஸ்ரேலிய (இடது), பலஸ்தீன(வலது) பிரதமர்களுடன் அதிபர் புஷ்.

## எதிர்ப்பு



பலஸ்தீன-இஸ்ரேல் பிரதமர்கள் மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தத்தில் கைபெழுத்திட்டதும், பலஸ்தீன பிரதேசங்களில் உள்ள சட்டவிரோதக் குடியிருப்புக் கள் அகற்றப்படும் என்று தெரிவித் திருந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரி வித்து இஸ்ரேலியர்கள் ஆர்ப்பாட்டத தில் ஈடுபட்டனர். (ம)

# பொதுக்கூட்ட அறிவித்தல்

## அளவெட்டி அணிஞ்சிலடி விநாயகர் ஆலயம்

மேற்படி ஆலய பொதுக்கூட்டம் 22-06-2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது. மாதப்பூசை உபயகாரர், உற்சவ உபயகாரர், சதுர்த்தி உபயகாரர், ஏனைய உபயகாரர்கள், அடியார்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு தவறாது சமுகம் தந்து புதிய நிர்வாகசபைத் தெரிவிலும் கலந்து கொள்வதுடன் ஆலய நிர்வகிப்பில் காணப்படும் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி நிர்வாகம் சீராக இயங்க ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய நிர்வாகசபை,
செ. கணேசராசா
செயலாளர்.

(18786)

# பணிநிலை வெற்றிடம்

சமூக அபிவிருத்தி தொடர்பான கீழ்க் குறிப்பிட்ட நிறுவனம் **'சிறுவர் நலன் மேம்பாட்டு உத்தியோகத்தர்'** பதவிக்கு விண்ணப்பம் கோருகின்றது.

**தகைமைகள்:**

1) சமூகப் பணியுடன் தொடர்பான பல்கலைக்கழக பட்டதாரி

அல்லது

க.பொ.த.உயர்தர வகுப்பில் சித்தியும் சமூகப்பணி தொடர்பான கற்கை நெறியுடன் சமூகப் பணியில் ஆர்வமும் அனுபவமும்.

மேற்குறிப்பிட்ட தகைமையுடன் சிறுவர் நலன், திறனாய்வு, தொழில் நுட்பவியல் சமூக, அபிவிருத்தி ஆகியவற்றில் முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

2) 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3) பணித்தளத்தில் தங்கியிருந்து சேவை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
4) சிறந்த தேக ஆரோக்கியமுடையவராக இருக்க வேண்டும்.
5) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி: **20-06-2003**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**பணிப்பாளர்,**
**நவஜீவனம், பரந்தன்.**

(18757)

## அறிமுறைத் தேர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்6

வட இலங்கை சங்கீதசபை நடத்தும் அறிமுறைத் தேர்வு அகில இலங்கை ரீதியாக நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என சபையின் தலைவரும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)

## நூல் அறிமுகமும் ஒலிப்பேழை வெளியீடும்

யாழ்ப்பாணம்,ஜூன்6

ஈழத்தமிழர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில், இசை நூல்களின் அறிமுகமும், பண்ணிசைப் பாமாலை ஒலிப்பேழை வெளியீடும் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முதுநிலைப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசையாசிரியர் பயிற்சித்துறைத் தலைவரும், சங்கீத வித்துவானுமாகிய பேராசிரியர் எஸ்.கே.சிவபாலனின் ஆக்கங்களான 'உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு', 'நாட்டுப்புற இசைமரபு', 'பண்ணிசைப் பாமாலை' ஒலிப்பேழை ஆகியன இவ்வாறு வெளியிடப்படவுள்ளன.

'உலக இசைகளுக்குத் தமிழ் இசையின் பங்களிப்பு' எனும் நூலின் ஆய்வுரையினை இராமநாதன் நுண்கலை இசைத்துறைத் தலைவர் நா.வி.மு.நவரத்தினமும், 'நாட்டுப்புற இசை மரபு' என்னும் நூலின் ஆய்வுரையினை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலனும், 'பண்ணிசைப் பாமாலை'யின் ஆய்வுரையினை மகாவித்துவான் ந.வீரமணிஐயரும் நிகழ்த்துவர். (எ-ரி)


## வீதிப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீ[டு]

வரணி,ஜூன்6

சாவகச்சேரிப் பகுதியில் மோசமாகச் சேதமடைந்துள்ள ஏழு வீதிகளைப் புனரமைக்க இவ்வாண்டு சாவகச்சேரி நகரசபை நிதி ஒதுக்கியுள்ளது.

வீரக்கொட்டியார் ஒழுங்கை, வாகையடி ஒழுங்கை, தேவா[...] வீதி, ஈச்சம் தாழ்வயல் ஒழுங்[கை] சங்கத்தானை வயல் வீதி ஒழுங்[கை] பங்களா வீதி, தாளையடி அம்[...] கோவில் வீதி ஆகிய வீதிக[ள்] இந்த நிதியில் புனரமைக்கப்[பட]வுள்ளன. (ஒ-1[...])

# நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| 31ஆம் நாள் | | 36ஆம் நாள் |
|---|---|---|
|  | |  |
| அமரர் அருளம்பலம் அருளானந்தபுரீ | | திருமதி திருஞானசோதி குணேந்திரன் |
| 30.09.1953 | தோற்றம் | 28.02.1957 |
| 07.05.2003 | மறைவு | 03.05.2003 |

அன்னை தந்தையின் நலமே பெரிதென மதித்து
அந்நியநாடு செல்லாது எம்மை அன்புடன் ஆதரித்த தெய்வமே!
தங்கை வழியில் தமையனும் அடுத்தடுத்து மறைந்து
எம்மைத் தவியாய்த் தவிக்கவிட்டது ஏனோ?
ஆறாது அயராது அழுது புலம்பினாலும் தீருமோ எங்கள் கவலை?
உங்கள் நினைவுகளை எம்முள் சங்கமமாக்கி உங்களது
ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புச் செல்வங்களின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதலும் தேறுதலும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (06.06.2003) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி ந. அருளம்பலம்.
திருமதி கிரிஜாசக்தி அருளானந்தபுரீ
திரு. இ. குணேந்திரன் பிள்ளைகள்
மற்றும் சகோதரர்களும் பிள்ளைகளும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(18730)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில் **06-09-1948**

ஆண்டவனடியில் **07-05-2003**

## அமரர் ஐயாத்துரை குலசிங்கம் [குலம்]

(உரிமையாளர், குலம் கிறீம் ஹவுஸ், மானிப்பாய் - யாழ்ப்பாணம்)

பொலிந்த மேனி நெடிதுயர் தோற்றம்
மலிந்த புன்சிரிப்பு மாசறு வாய்மை
வெள்ளை உள்ளம் வெளிப்படைப் பேச்சு
கள்ளமில்லா நெஞ்சு கனிவான பார்வை
நண்பர்க்கு நண்பன் நாடுவோர் காமதேனு
அன்பரின் அன்பன் சுற்றத்தார் யார்க்கும்
நன்றுரை அமுதக்கிண்ணம், நான் இனி நட்ட கட்டை
இன்னுரை சொல்வார் யார்? இனி எனக் கேது வாழ்வு?
மின்னாமல் முழங்காமல் காலன் கவர்ந்தானே
மின்னற் கீற்றெனவே மறைந்தாய் ஐயா!
தொய்வில்லா வாழ்வு வாழ்ந்தீர் என்னுயிர்
தெய்வமே! என்னை விட்டுத் தொலைதூரம் போனதேனோ?

கடந்த 07-05-2003 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் ஐயாத்துரை குலசிங்கம் அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (06.06.2003) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் அதன் பின்னர் இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"குலம் கிறீம் ஹவுஸ்",
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

(c/28256)

அருமை மனைவி,
குடும்பத்தினர்.

# உதயன்

## டோக்கியோ மாநாடும் விடுதலைப் புலிகளும்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் மாநாடு டோக்கியோவில் இன்னும் இரண்டு நாள்களில் அதாவது, எதிர்வரும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடைபெறவிருக்கின்றது.

இந்த மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கு பற்றுவார்கள் என்று இனியும் எதிர்பார்ப்பதற்கில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடிதத்துக்கு விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தின் சார்பில் அனுப்பிய பதில் கடிதமும் -

நெதர்லாந்துத் தூதர் சபாஸ் பிளாங்கட், சுவிஸ் தூதர் பேர்னாடியேனோ றெகல் சொனி, பிரிட்டிஷ் தூதர் ஸ்ரீவன் இவான்ஸ் ஆகிய மூவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பும் - தமிழீழ விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை, ஏற்கனவே தெரிவித்தபடி வடக்கு - கிழக்குப் புனரமைப்பு, மக்களின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு முதலான அத்தியாவசியப் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கும் வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கும் வேண்டிய அரசியல் நிர்வாக அதிகாரங்களுடனும் புலிகளின் அதிகளவு பங்களிப்புடனும் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அரசு ஏற்படுத்துமானால் பிரச்சினை எதுவுமில்லை. புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வார்கள். இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களும் மீண்டும் ஆரம்பமாகும்.

ஆனால், அரசு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தத் தயாராக இல்லை.

அன்ரன் பாலசிங்கத்திற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுதிய கடிதத்தில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைத் தட்டிக்கழித்துவிட்டு உயர்சபை, அரச அதிகாரிகளைக் கொண்ட நிறைவேற்றுக் கட்டமைப்பு ஆகியவை பற்றிக் கதை அளந்திருக்கிறார்.

அவை எல்லாம் இப்போது செயற்படாதிருக்கும் 'சிரான்' போன்ற உருப்படாத அமைப்புகள் என்று சுட்டிக்காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று பிரதமருக்குத் தமது பதில் கடிதத்தில் அன்ரன் பாலசிங்கம் கூறிவிட்டார்.

இன்றைய நிலையில் வடக்கு - கிழக்கிற்குப் பயன்தரத்தக்கது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத்தான் என்றும் அவர் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை சு.ப. தமிழ்ச்செல்வனும் தம்மைச் சந்தித்து டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்துகொள்ளவேண்டும் என்று விரும்பம் தெரிவித்த மூன்று வெளிநாட்டுத் தூதர்களிடமும் விளக்கியிருக்கிறார்.

அவர் இன்னும் ஒருபடி மேலே சென்று சர்வதேச சமூகத்தின் உள்ளத்தைத் தொடும்வகையில் "ஜப்பான் மாநாட்டுக்குச் செல்லுமாறு எங்களுக்கு அழுத்தம் தருவதுபோல இடைக்கால நிர்வாகத்தை வழங்குமாறு இலங்கை அரசுக்கும் அழுத்தங்கொடுங்கள்" என்று கேட்டிருக்கிறார்.

புலிகள் பக்கத்தில் உள்ள நியாயத்தைத் தூதர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார். எனினும், அவர்கள் இடைக்கால நிர்வாகம் வழங்குமாறு அரசுக்கு அழுத்தங்கொடுப்பார்களா என்பதுதான் கேள்வி.

டோக்கியோ மாநாட்டுக்கு புலிகள் சென்றால் வடக்கு - கிழக்கின் தேவையைச் சரிவர எடுத்துக்கூறி கூடுதலான உதவிப் பணத்தைப் பெறும்வாய்ப்பு கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனால், கிடைக்கும் பணத்தை வடக்கு - கிழக்கிற்கு சரிவரப் பயன்படுத்துவதற்கு புலிகளின் கூடுதல் பங்களிப்புடனான இடைக்கால நிர்வாக அமைப்புப் போன்ற அரசியல் நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் எவ்வளவு கூடுதலான பணத்தைப் பெற்றும் என்ன பயன்?

பழைய காலங்கள் போல் அரசு, வடக்கு - கிழக்கைப் புறக்கணித்து முழுப் பணத்தையும் தெற்கின் அபிவிருத்திக்காகச் சுருட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

டோக்கியோ மாநாட்டுக்கு புலிகளும் வந்தால் நிறையப் பணம் கிடைக்கும் என்பதில் அரசு அக்கறையாக இருக்கிறதே தவிர, கிடைக்கும் பணத்தில் உரிய பங்கு வடக்கு - கிழக்கிற்குச் சரிவரச் சுவறவேண்டும் என்பதில் அறவே ஆர்வங்காட்டுவதாகத் தெரியவில்லை.

வடக்கு - கிழக்கின் களநிலைமையை அரசு கவனத்தில் எடுக்காமல் நாட்டின் சட்டதிட்டத்திற்குப் புறம்பாக நடக்கமுடியாது என்று கூறிக்கொண்டு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தாமல் தட்டிக்கழித்து வருகிறது.

புலிகள், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை வலியுறுத்துவதன்மூலம் பந்தை மீண்டும் அரசின் ஆடுகளத்தில் போட்டுவிட்டு உறுதியாக நிற்கிறார்கள். வேறு வழி?

---

**யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன்**

## வலி. தெற்கு பிரதேசத்தில் வீடுகள், மலசலகூடங்கள்

### மீளக்குடியமர்ந்தோருக்கு கிடைக்கும்

வலி.தெற்கு, ஜூன்6

யாழ். கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐநா.தூதரகத்தின் உதவியுடன் அரை நிரந்தர வீடுகள், மலசலகூடங்கள் போன்றன அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்த 53 குடும்பங்களுக்கு 26 லட்சத்து 95ஆயிரம் ரூபா செலவில் அரை நிரந்தர வீடுகளும் -

34 குடும்பங்களுக்கு 5 லட்சத்து 42 ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடங்களும் - அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

தாவடி தெற்கில் 22 வீடுகளும், இணுவில் தென்மேற்கில் 4 வீடுகளும், உடுவில் தென்மேற்கில் 10 வீடுகளும், ஏழாலை தென்மேற்கில் ஒரு வீடும், உடுவில் தென்கிழக்கில் 4 வீடுகளும், உடுவில் வடக்கில் 3 வீடுகளும், புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 8 வீடுகளும், சுன்னாகம் மேற்கில் ஒரு வீடும் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளன.

அதேபோல - தாவடி தெற்கில் 10 குடும்பங்களுக்கும், தாவடி வடக்கில் 7 குடும்பங்களுக்கும், உடுவில் தென்மேற்கில் 8 குடும்பங்களுக்கும், ஏழாலை மத்தியில் 3 குடும்பங்களுக்கும், புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 4 குடும்பங்களுக்கும், ஏழாலை தென்மேற்கு, இணுவில் தென்மேற்கு ஆகிய பகுதிகளில் தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (எ-152)

---

## நாட்டு நடப்பு

### நாடின்று காடாய்ப் போச்சு

கொட்டனால் ஊமை ஒன்றை
கொடூரமாய் அடித்துக் கொன்றார்
வெட்டினார் வழிப்போக்கர் தன்னை
வீழ்த்தினார் கிணற்றில் பின்னே
கட்டிய மனையாளைக் கள்வன்
கழுத்தினை நெரித்தே கொன்றான்
பட்டப் பகலில் பெண்ணை
பாலியல் வல்லுறவுக்கிட்டார்
நட்டதும் கழண்டு விட
நடு வீதியில் 'வான்' புரள
இட்டம்போல் பயணம் செய்தோர்
இருவர் அவ்விடத்தில் மாண்டனர்
துட்ட கள்வர் தம்மை
துரத்தினர் பிடிக்கவில்லை
மட்டற்ற இதுபோல் செய்தி
மலருது நாளும் ஏட்டில்
கெட்டது எமது நாடு
கொடுங்காடாய் போச்சுதின்று.

- விகடகவி.

---

## முள்ளியில் கண்ணிகளை அகற்றித்தரக் கோரிக்கை

### மணியம்தோட்ட மக்கள் பிரதேச செயலருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

அரியாலைப் பகுதியில் உள்ள முள்ளியில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு வசதியாக அங்குள்ள கண்ணிவெடிகளை அகற்றித் தருமாறு அரியாலை தென்கிழக்கு (மணியம்தோட்டம்) பகுதி மக்கள், நல்லூர் பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர்.

மணியம்தோட்டப் பகுதியில் வசித்து வந்த 650 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள், பிரதேச செயலருக்கு எழுதிய கடிதத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இவர்களது சொந்த வீடுகள் தற்போது இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கின்றன. இதனால் மணியம்தோட்டப்பகுதி மக்கள் தற்போது குருநகர், நாவாந்துறை, ஈச்சமோட்டை, பாசையூர் போன்ற இடங்களில் உறவினர் வீடுகளில் பல்வேறு துன்பங்கள், கஷ்டங்கள் என்பவற்றுக்கு மத்தியில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களது நெருக்கடிகளைத் தீர்க்கும் வகையில் இவர்களை முள்ளிப்பகுதியில் தற்காலிகமாக மீளக் குடியமர்த்துவதற்கு நல்லூர் பிரதேச செயலர் திட்டமிட்டிருந்தார். எனினும், அங்கு புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்படாத காரணத்தால் மீளக் குடியமர்வை மேற்கொள்ளமுடியவில்லை.

எனவே, மிதிவெடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்குமாறு மணியம்தோட்ட மக்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(ம-180)

---

**யாழ்.மாவட்டப் பதிவகத்தில்**

## பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை விரைவில் வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்டப் பதிவகத்தில் தற்போது பிறப்பு, இறப்பு தொடர்பான சான்றிதழ்களை பெறுவதற்கான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெறுவதற்கான விண்ணப்பங்களில் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களின் இலக்கம் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களிற்கான சான்றிதழ்ப் பிரதிகள் 3முதல் 5 நாள்களிற்குள்ளும் -

இலக்கம் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களிற்கான சான்றிதழ்ப் பிரதிகள் 7முதல் 10 நாள்களிற்குள்ளும் - விண்ணப்பித்தவர்களின் முகவரிகளுக்குக் கிடைக்கக் கூடியவாறு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பிறப்பு அல்லது இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அப்போதைய தேவைக்காக மட்டுமே விண்ணப்பிப்பதாகவும் -

ஒரே தடவையில் மூன்று பிரதிகளுக்கு விண்ணப்பித்து மூன்று பிரதிகளைப் பெறுவதன் மூலம் மீண்டும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலையைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் - மாவட்ட பதிவக அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.(ஒ-8)

---

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் மூலம்**

## 18 வயதுக்குட்பட்டோருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

### பெற்றுக்கொடுக்க விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன்6

18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 18 வயதுக்குக்குட்பட்டவர்களாகவும், இதுவரை காலமும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமலும் இருப்பவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியின் அறை இல.30இல் இயங்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினருடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் -

இவ்வாறு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறவுள்ளோர் தத்தமது கிராம அலுவலர்கள் ஊடாக, பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடனும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம தேவைப்படுவோர் பற்றிய விவரத்துடனும் சமுகமளிக்கவேண்டுமென மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ)

**நாளை**

வைகாசி 24
சனிக்கிழமை
07.06.2003
திதி : ஸப்தமி
முற்பகல் 10.55 வரை
நட்சத்திரம் : மகம்
காலை 6.08 வரை
பூரம் வைகறை 5.17வரை
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம் :8.52 - 10.23
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

இறைவன் நமக்காக எதுவும் செய்வதில்லை. ஆனால், எமக்குத் தேவையானதை நாமே செய்துகொள்ளும் வலிமையை அவர் தந்துள்ளார்.

---

## வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைத் திருட முயற்சி!

### கல்வியங்காடு பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

கல்வியங்காடு பகுதியில் ஒரு வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைத் திருடிச்செல்ல திருடர்கள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியங்காடு புலவனார் வீதிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த வாரம் இத்திருட்டு முயற்சி இடம்பெற்றது.

திருடர்கள் வீட்டின் முன்முற்றத்தில் விடப்பட்டிருந்த ஓட்டோவில் இருந்த 3ஆயிரம் ரூபா பெறுமதியான ரேடியோவைக் கழற்றிக்கொண்டு ஓட்டோவையும் கொண்டு செல்ல முயற்சி செய்தனர். ஓட்டோவின் 'கான்ரில் லொக்' (பூட்டு) போடப்பட்டிருந்ததால் அதை உடைக்கத் திருடர்கள் முயற்சி செய்தவேளை வீட்டில் இருந்தோர் திடுக்குற்று எழுந்து குரல் எழுப்பவே திருடர்கள் ஓட்டோவைத் திருடும்முயற்சியைக் கைவிட்டுத் தப்பிவிட்டனர்.

இதேவேளை -

கடந்த வாரம் நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சர்வானந்தன் என்பவரது வீட்டில் இரவு உட்புகுந்த திருடர்கள் 3லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைத் திருடிச்சென்றுள்ளனர்.

இதேபோன்று, கல்வியங்காடு புதிய செம்மணி வீதியிலுள்ள வீடு ஒன்றில் திருடர்கள் திருடிவிட்டுப் பொருள்களுடன் தப்பிக்க முயன்றபோது வீட்டார் கூக்குரல் இடவே பொருள்களை விட்டுவிட்டு திருடர்கள் ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)

## கைதடியில் திருடர் தொல்லை!

கைதடி ஜூன்6

திருடர்களின் நடமாட்டம் மீண்டும் கைதடிப்பகுதியில் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைதடிச்சந்தியில் உள்ள பொன்னன் செல்வராஜா என்பவரின் வீட்டினுள் நுழைந்த திருடன் வீட்டினுள் உள்ளோர் விழித்துக் கொண்டதனால் அங்கிருந்து தப்பியோடிவிட்டதாகவும் -

திருடவந்த நபர் தனது கைக்கடிகாரத்தையும், டோர்ச்லைற்றையும் விட்டுச் சென்றுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கைதடி தெற்கைச் சேர்ந்த க.நந்தினி என்பவரின் வீட்டிலும் திருட்டு முயற்சியில் ஈடுபட்டோர் விரட்டப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இரவும் கைதடி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் உட்புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்தோர் விழித்துக்கொண்டு கூக்குரலிட்டதனால் தமது முயற்சியைக் கைவிட்டுச் சென்றுவிட்டனர்.

திருடர்களின் தொல்லையால் மக்கள் இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விழிப்புக்குழுக்களை அமைப்பது உட்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கைதடி மக்கள் கோருகின்றனர். (ஓ-75)

**2003 - 2004 இற்கான புதிய பிரிவுகள்**

**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**

(யாழ்ப்பாணம்/பேராதனை)

**G.A.Q., 1st in Com., B.A. (I) & B.A. (II)**

**விரிவுரைகள் ஆரம்பம்: 07-06-2003**

- ஆங்கில இலக்கியம், மொழியியல் உட்பட சகல பாடங்களுக்குமான விரிவுரைகள்
- நூலக வசதி உண்டு
- பல்கலைக்கழக பதிவுகள் எம்மால் செய்து தரப்படும்.

Director
**JAFFNA COLLEGE**
**UNDERGRADUATE DEPT.**
464, Hospital Road,
Jaffna.

(சி-28245)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### இரத்தினம் பாஸ்கரன்

உதிப்பு 18-07-1961 — மறைவு 20-05-2002

திதி: 06-06-2003

ஒளிதந்த எம் சூரியனே
நீ உறங்கி ஓராண்டு ஆனதப்பா
உன் ஒளியில் வழிபார்த்து நடந்த
எம் கால்களுக்கு
வழியேதும் தெரியவில்லையே நீயின்றி...
கலகலக்கும் உன் பேச்சையும்
மாசில்லா புன்னகையும்
காலனவன் பறித்திட என்ன பாவம் செய்தோம்?
ஈடில்லா உன் பாசத்தில் நனைந்த
எம்மையெல்லாம் கண்ணீரில் நீராட்டி
நீ மட்டும் சிரிக்கிறாயே மாலைகள் நடுவே
எப்படித் தாங்குவோம்.... முடியவில்லையே?
காலம்தான் கரைந்தோடிப் போகுமே
உன் நினைவுகள் கரையாது எம் நெஞ்சில்.

(18773)

'சாந்தமஹால்'
அண்ணாசிலையடி, கரணவாய்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## தபாலதிபர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்ப்பாணப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் பிரதம லிகிதராகக் கடமைபுரிந்த அதுரைசிங்கம் வல்வெட்டித்துறை தபாலக அதிபராகவும், அங்கு தபாலதிபராகக கடமைபுரிந்த எஸ்.அரியரட்ணம் கரவெட்டி அஞ்சல் அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - பருத்தித்துறை அஞ்சல் அதிபராக தங்கராசா நியமனம் பெற்றுள்ளார். (ஒ-170)

## 'றனிகட்'நோய் பாதிப்பு கோழிகளில் அதிகரிப்பு

தற்போது குடாநாட்டில் நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக கோழிகளுக்கு 'றனிகட்' நோய் தீவிரமாக பரவிவருவதாக கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து வலி.தெற்குப் பிரதேச கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் கோழிகளுக்கான நோய்த் தடுப்பு மருந்து விநியோகிக்கப்படுகின்றது.

கோழி வளர்ப்போர் சனிக்கிழமைகளில் வந்து தடைமருந்தை பெறலாம் எனவும் -

வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றுவதற்கு தம்முடன் தொடர்புகொள்ளுமாறும்-

சுன்னாகத்தில் உள்ள கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.(ஒ-152)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





**அமரர் நாகநாதர் நாகலிங்கம்** — **திருமதி அரவிந்தமலர் நாகலிங்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 02-11-1940 | → | மண்ணில் | → | 14-02-1951 |
| 02-05-2003 | → | விண்ணில் | → | 07-05-2003 |

அன்போடும் பண்போடும் ஆதரவாய் வழிகாட்டி
எம் நல்லறிவிற்கு வளமூட்டி
எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வங்களே!
முப்பத்தொரு நாளுமாயிற்றோ நீங்கள்
எமைப்பிரிந்து, எப்போதும் உங்கள் நினைவு
எங்களது நெஞ்சங்களை நிறைத்து நிற்கும்!

ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

இன்று (06-06-2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னார்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா வீதி, அச்சுவேலி தெற்கு. (18774) **பிள்ளைகள், மருமகன்.**


**SHARP** ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது

be sharp

யாழ்ப்பாணத்தில்



SHARP

உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.

யாழ் நகரிலேயே அனைத்து சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.

நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up

Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# 125 ரூபா உண்டியல் பணத்துடன் தேங்காய் வியாபாரம் ஆரம்பித்தவர்

## 24 ஆண்டுகளில் பர்ஸானா எக்ஸ்போர்ட்ஸ் என்.எம்.சித்தீக் புரிந்த சாதனை



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழிலதிபர் என்.எம்.சித்தீக்கை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் சட்டத்தரணி செ.குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 3 ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் என். எம். சித்தீக்.

தச்சுத் தொழில் புரிந்து நாளாந்தம் கிடைத்த ஆறு ரூபா சம்பளத்தில் மிச்சம் பிடித்தார். அவ்விதம் உண்டியலில் சேர்ந்த 125 ரூபா பணத்துடன் தேங்காய் வியாபாரத்தில் ஈடுபட்டார் என். எம். சித்தீக்.

1979 ஆம் ஆண்டு தேங்காய் வியாபாரத்தை அவ்விதம் ஆரம்பித்தவர், இன்று பல நாடுகளுக்குத் தேங்காய் ஏற்றுமதி செய்யும் பர்ஸானா எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் அதிபராக உயர்ந்திருக்கிறார்.

ரீ. என். எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் என். எம். சித்தீக்கை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:-* தேங்காய் ஏற்றுமதியாளராக இன்று உயர்ந்துள்ளீர்கள். நீங்கள் கடந்துவந்த பாதையைச் சற்று ஞாபகப்படுத்திக் கூறமுடியுமா?

*பதில்:-* நான் புத்தளம் மாவட்டத்தில் மதுரங்குளியைச் சேர்ந்தவன். இளம் வயதில் எனது தந்தையைப் போலவே நானும் தச்சுத் தொழிலில் ஈடுபட்டேன். ஆறுபேரைக் கொண்ட சகோதர சகோதரிகளில் நான் ஐந்தாவதாகப் பிறந்தேன். நாங்கள் நடுத்தரக் குடும்பம். 1979ஆம் ஆண்டில் தச்சுத் தொழிலில் நாளாந்த வருமானமாக ஆறு ரூபா கிடைக்கும்.

நான் உழைக்கும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை உண்டியலில் சேமித்து வந்தேன். அந்த உண்டியலில் 125ரூபா சேர்ந்திருந்தது. இந்த 125ரூபா முதலீடுதான் என்னை இந்த அளவிற்கு உயர்த்தியது.

*கேள்வி:-* தேங்காய் வியாபாரத்தை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?

*பதில்:-* அந்தப் பணத்தில் ஒரு மாட்டு வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். கிராமம் முழுவதும் அலைந்து தேங்காய் கொள்வனவுசெய்து அவற்றை கொழும்புச் சந்தைக்கு எடுத்துச் செல்லும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வந்தேன். சிறிது நாள்களில் நான் சேமித்த பணத்தைக் கொண்டு ஒரு பழைய லொறியைக் கொள்வனவு செய்தேன். பின்னர் இந்த லொறி மூலம் தேங்காயைக் கொழும்புக்கு ஏற்றினேன். அதிகாலை 3.00 மணியளவில் புறப்பட்டுச் சென்று நடைபாதையில் உறங்கி இந்த வியாபாரத்தை மேற்கொண்டேன். இதன் பின்னர் தேங்காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்தேன். இதன் பின்னர் நானே தேங்காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தேன்.

*கேள்வி:-* இத்துறையில் நீங்கள முன்னேற்றமடைய உதவியவர்கள் யார்? எவ்வாறு உதவி புரிந்தார்கள்?

*பதில்:-* முதலில் தேங்காய்களைப் பிரதான வீதிக்கு எடுத்து வந்தோம். அங்கு அவற்றை ஒழுங்கு படுத்திக் கொள்கலன்களில் ஏற்றி அனுப்புவோம். பிரதான வீதிக்கான பாதை மோசமாக இருந்ததுதான் இதற்குக் காரணம்.

*கேள்வி:-* வெளிநாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதி வியாபாரம் எந்த விதமாக இருந்தது?

*பதில்:-* ஆரம்பத்தில் ஓரிரண்டு கொள்கலன்களிலேயே மாதாந்தம் தேங்காய்களை ஏற்றுமதி செய்தோம். பின்னர் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டது.

*கேள்வி:-* உங்கள் வளர்ச்சிக்கு உதவிய வேறு நிறுவனங்கள் எவை?

*பதில்:-* உண்மையிலேயே எனது வளர்ச்சிக்கு வங்கிகள் பெரிதும் உதவின. குறிப்பாக செலான் வங்கி எனக்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்தது. செலான் வங்கியின் உதவி இல்லாவிட்டால் நான் இந்த அளவிற்கு வளர்ச்சியைப் பெற்றிருக்க முடியாது.

*கேள்வி:-* உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன? புதிய முதலீடுகளில் ஈடுபடும் எண்ணம் இருக்கிறதா?

*பதில்:-* இப்போது நாங்கள் உலகெங்கிலுமுள்ள நாடுகளுக்கு தேங்காயை ஏற்றுமதி செய்கின்றோம். மாதாந்தம் 15முதல் 20 கொள்கலன்கள்வரை தேங்காய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. நாங்கள் கிரமமாக துபாய், கராச்சி, லெபனான், சிரியா, ஜோர்டான், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதி செய்கின்றோம். புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கு என் வயது இடம்கொடுக்காது. தொடர்ந்து தேங்காய் ஏற்றுமதித் துறையில் ஈடுபடவே நான் விரும்புகிறேன். என்னைப் புரிந்துகொண்டு என் தொழிலில் எனக்கு ஊக்கமளிக்கும் மனைவி வாய்த்திருப்பது இறைவன் செயல். எனக்கு ஏழு பிள்ளைகள் இருக்கின்றனர். எனது பிள்ளைகளும் எனது தொழிலுக்கு உதவி புரிகின்றனர்.

- இவ்வாறு கூறினார் என்.எம். சித்தீக்.

# நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளோர் அரசைக் கண்டித்து பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூன்6

வலி.வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் அரசு எடுக்காததைக் கண்டித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர்களை அனுப்பியுள்ளனர். இந்த மகஜர்கள் அனைத்தையும் நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்தில் வைத்து யாழ். அரச அதிபர் எஸ்பத்மநாதனிடம் அவர்கள் கையளித்தனர்.

இம்மக்கள் தம்மை மீளக் குடியமர்த்தக் கோரி கடந்த மாதம் யாழ். செயலகத்தின் முன் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அரசு ஒரு சாதகமான பதிலைத் தரவேண்டும் எனவும் -

அப்படி பதில் கிடைக்காத விடத்து தமது போராட்டங்களை விஸ்தரிக்க வேண்டி ஏற்படும் எனவும் - அவர்கள் எச்சரித்திருந்தனர்.

எனினும், மீள் குடியமர்வு தொடர்பாக அவர்களுக்கு இதுவரை ஆக்கபூர்வமான பதிலேதும் கிடைக்கவில்லை. அரசின் இந்த மெத்தனப் போக்கைக் கண்டித்து 48 நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் முகாமுக்கு ஒரு மகஜர் வீதம் 48 மகஜர்களை பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.செயலகத்துக்கு வந்த நலன்புரி முகாம்களின் பிரதி நிதிகள் யாழ்.அரச அதிபரிடம் பிரதமருக்கான மகஜர்களைக் கையளித் தனர்.

அவற்றை பிரதமருக்கு அனுப்பிவைப்பதாக யாழ். அரச அதிபர் அவர்களிடம் தெரிவித்தார்.

நலன்புரி முகாம்களில் தற்போது மேற்கொள்ளப்படவேண்டிய குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளை சீர்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அரச அதிபர் அப்போது உறுதியளித்தார். (ஒ-8)

## சைவசமய அறிவுப் போட்டி

வலிகாமம் தெற்கு,ஜூன்6

இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு, இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை, இந்துசமய வளர்ச்சிச் சங்கம் ஆகியன இணைந்து சைவசமய அறிவுப் போட்டியினை நடத்தவுள்ளன.

இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம். இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 9ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து பாடசாலை அதிபரின் ஒப்பத்துடன் அனுப்பி வைக்குமாறு இளந்தொண்டர் சபை பரீட்சைத் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-172)



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் ஆண்டுவிழாவும், பட்டமளிப்பு விழாவும் அண்மையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சைவப்புலவர் வ.கந்தசாமி, பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், மேலதிக அரசாங்க அதிபர் சைவப்புலவர் திருமதி ப.திலகநாயகம் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும், பிரதமவிருந்தினரான இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் புராணபடனப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

சைவப்புலவர் சங்கத் தலைவர் சித்தாந்த பண்டிதர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நம்பர் பதியப்படாத புதிய Super Cup Lancer 50 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.G.செல்வராசா, 107, டேவிற் றோட், யாழ்ப்பாணம். (18804)

## காணி விற்பனைக்கு

சந்தையடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 13/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல. 1917, C/o உதயன். (18794)

## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்துக்கு சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், தாவடி, மானிப்பாய், சுதுமலை போன்ற இடங்களில் விருமபத்தக்கது. தொடர்பு: விளம்பர இல.1916, C/o உதயன், யாழ்ப்பாணம்.(18759)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில 1962இல் பிறந்த புலமைப்பரிசிலில் சென்று ரஷ்யாவில் M.B.B.S. பட்டம பெற்று தற்பொழுது லண்டனில் Nursing Assistant ஆகத் தொழில புரியும் மணமகனுக்கு படித்த, அழகிய 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.1909, C/o உதயன். (18681)

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் சொந்தக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு செவ்வாய்க் குற்றமற்ற, 35 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1919, மே/பா உதயன். (18801)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ குடும்பம், 33வயது, செவ்வாய்க்குற்றமற்ற, சுவாதி நட்சத்திர மணமகளுக்கு வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1918, மே/பா உதயன். (18802)

## திருமண சேவை

1974ஆம் ஆண்டு, பூரம், செவ்வாய அற்ற Civil Engineer ஆக அரச தொழில் பார்க்கும் மணமகனிற்கு சம கல்வித் தரம் கொண்ட பொருத்தமான மணமகள் தேவை. நேரில் அல்லது கடிதமூலம் உடன் தொடர்பு கொள்ளவும். தூர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.(18799)

## தவறிவிட்டது

பளையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராசலட்சுமி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 487530069V) யாழ்.பஸ்நிலையத்துக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கலாசாலை வீதி, முதலாம் ஒழுங்கை, திருநெல்வேலி. (A.G.A. மகாலிங்கம் வீடு) என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P.222-2948 (18795)

க.கருணாகரன் என்பவருடைய யமகா மேற் 90 மோட்டார் சைக்கிளுக்குரிய சகல ஆவணங்களும் அடங்கிய கறுப்பு நிற பாக் 31.05.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். (18770)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

செம்பியன்பற்று, ஜூன் 6

கரவெட்டி பிரதேச செயலகத்தின மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறுமென கரவெட்டி பதில் பிரதேச செயலர் ஆர் சிவபுண்ணியம் அறிவித்துள்ளார். (ஓ-36)

## வை.எம்.சி.ஏ. ஸ்தாபகர் தினம்

சண்டிலிப்பாய், ஜூன் 6

வட மாகாண வை.எம்.சி.ஏ. ஒன்றியத்துடன் இணைந்து யாழ். மாவட்ட வை.எம்.சி.ஏ. ஒன்றியம் வை.எம்.சி.ஏ. ஸ்தாபகர் தினத்தை நாளை கொண்டாட ஏற்பாடுகளை செய்து வருகிறது.

வட மாகாண வை.எம்.சி.ஏ. ஒன்றியத் தலைவரும், சமாதான நல்லெண்ண தூதுக் குழுவின் தலைவருமான டி.ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள ஆகியன இடம்பெறவுள்ளன. (ஓ-135)

# காரைநகரில் 'நியாப்' திட்டத்தை அதிகாரிகள் குழுவினர் பார்வை

காரைநகர், ஜூன் 6

காரைநகரில் 'நியாப்' திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை காரைநகருக்கு புதன்கிழமையன்று விஜயம் செய்த உலகவங்கி பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

உலக வங்கியின் ஆலோசகர் எஸ்.ஜெகநாதன், உலகவங்கிப் பிரதிநிதி நிகால் பெர்னாண்டோ ஆகியோருடன் திருகோணமலையில் அமைந்துள்ள திட்டமுகாமைத்துவ தலைமை அலுவலக உதவிப் பணிப்பாளர் பி. பத்மநாதன், நியாப் சமூக விஞ்ஞான கண்காணிப்பு வல்லுநர் கெட்டி ஆராட்சி, நியாப் ஜீவனோபாயத்திட்ட வல்லுநர் எம்.ஜெகநாதன உட்பட பலர் இக்குழுவில் வருகை தந்திருந்தனர்.

சுமார் 40 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் சாம்பலோடை உவர்நீர் தடுப்பணையை பார்வையிட்ட பிரதிநிதிகள் அப்பகுதியில் உள்ள மக்களுடன் திட்டம் குறித்துக் கலந்துரையாடல்களையும் நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் அப்பகுதியில் உள்ள பரவைக்குளம் ஆழமாகக் கப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும் எனவும் -

ஜீவனோபாய ஆதார செயற்பாட்டுத் திட்டத்தை விரைவில் அமுலபடுத்த வேண்டும் எனவும் -

பொதுமக்கள் உலகவங்கி பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ந்து உலக வங்கி பிரதிநிதிகள் காரைநகரில் புனரமைக்கப்பட வேண்டிய வேணன் உவர்நீர் தடுப்பணை மற்றும் குளங்களையும் பார்வையிட்டுச் சென்றனர். (ம-73)

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்த

# பாலங்களின் புனரமைப்பு பற்றி அமைச்சின் குழு ஆராய்கிறது

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு முக்கிய பாலங்களைப் புனரமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்குழுவினர் கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்.மாவட்டத்தின் முக்கிய பாலங்களைப் பார்வையிட்டு வருகின்றனர். பாலங்களில் மேற்கொள்ளபடவேண்டிய திருத்த வேலைகள் மற்றும் பாலங்களின் தற்போதைய நிலைமை போன்றவற்றையும் இக்குழுவினர் ஆராய்ந்து வருகின்றார்கள்.

இக்குழுவினருடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி திட்ட அலுவலர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப்பாலங்கள் உறுதியானதாகவும், தொடர்ச்சியாக நீண்ட காலத்துக்குப் பயன்படுத் தத்தக்கதாகவும் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-12)

## யாழ்ப்பாண மாநகரசபை
## உள்ளூராட்சி வாரம் - 05 மைல் ஓட்டப்போட்டி

உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வதிவோர் மாத்திரம் பங்குபற்றும் 05 மைல் ஓட்டப்போட்டியை யாழ். மாநகரசபை எதிர்வரும் 13.07.2003 ஆம் திகதி நடத்தவுள்ளது.

இப்போட்டி தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக விவரங்களை உள்ளூராட்சிவாரக் கொண்டாட்ட தினையொட்டி நல்லூர் மாநகரசபை வளவினுள் இயங்கும் விசேட அலுவலகத்தில் ரூபா 50/- ஐ செலுத்தி எதிர்வரும் 25.06.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/28365)

# வாக்காளர் பட்டியல்களில் திருத்தப் பணிகள் ஆரம்பம்

வரணி,ஜூன்6

வாக்காளர் பட்டியலில் இந்த ஆண்டுக்கான திருத்தப் பணிகள் ஆரம்பமாகி உள்ளதாக இலங்கை தேர்தல் ஆணையாளர் தயானந்தா திசாநாயக்கா அறிவித் துள்ளார்.

கடந்த ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல்களை பொதுமக்கள் பார்வையிட்டு தமது பெயர்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என பரிசீலிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள், மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை போன்றவற்றின் அலுவலகங்கள் கிராம அலுவலர்கள் அலுவலகங்கள் ஆகியவற்றில் அந்தந்தப் பிரிவுகளின் வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.(ஓ-170)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(27865)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின்
ஆதரவில்
**யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம்**
வழங்கும்

## காத்தவராயன்

(மரபுவழி சிந்துநடைக்கூத்து)

காலம்: 07-06-2003 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பிரவேசம் 30/- 50/-

(18800)

## கண்ணீர் அஞ்சலி

தாதியர் பயிற்சிப் பாடசாலை
போதனாசிரியரின் அன்புத் தாயார்

**திருமதி சாந்தலிங்கம் முத்தம்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

99ம் பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம்.

(18797)

ஒரு வியப்பூட்டும் தகவல் என்னிடம் உள்ளது!! செலான் வங்கி எனக்கு உண்மையான...

9% போனஸ் வட்டியை வழங்குகிறது.

30 நாட்களில் 7.5% 90 நாட்களில்

மிலேனியம் 30
30 நாள் நிலையான வைப்பு



நான் செலான் வங்கியுடன் மிலேனியம் 30 நிரந்தர வைப்புக் கணக்கொன்றை 3 தொடர்ச்சியான மாதங்களுக்கு வைத்திருப்பின் வருடமொன்றுக்கு 1.5% வீதம் போனஸ் வட்டி மூன்றாம் மாத முடிவில் கிடைக்கும்.

இச்சலுகை மே மாதம் 26ம் திகதி முதல் ஜூன் மாதம் 26ம் திகதிக்குள் கணக்கொன்றை ஆரம்பித்தால் அல்லது பழைய கணக்கை புதுப்பித்தால் மட்டுமே.

நடைமுறை மிலேனியம் 30 - வட்டி வீதம் வருடமொன்றுக்கு 7.5%
(வருடாந்த விளைவு வீதம் 7.76%)

3ம் மாத முடிவில் வட்டி வீதம் வருடமொன்றுக்கு 9%
(வருடாந்த விளைவு வீதம் 9.38%)

மேலதிக விபரங்களுக்கு நாடெங்கும் பரந்துள்ள ஏதாவது செலான் வங்கி கிளையை நாடுங்கள் தொலைபேசி: 021-2223755, 021-2223047

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமையகம்: சிலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3. தொ.பே: 456789, 074-701000 பெக்ஸ்: 456456, ஈ-மெயில்: info@seylan.lk

GRACE

# சமய அறிவை வளர்க்க நூல்கள் எழவேண்டும்!

## 'அருட்கவி' விநாசித்தம்பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

இளைய தலைமுறையினர் மத்தியில் சமயக்கல்வியை - சமய அறிவை - வளர்க்கும் வகையில் இலக்கியங்கள எழுவது காலத்தின் தேவையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர்.

வல்வெட்டியூர் கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி எழுதிய 'திருவிளையாடற் பூசைப்பா மலர்கள்' என்னும் நூல் வெளியீட்டுவிழா அண்மையில் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருட்கவி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இறைவன் பாதங்களை நாமடைவதற்கு இறைநாமங்களை நாவினால் எந்நேரமும் ஓதிவருதல் சிறந்த ஒரு வழியாகும். அவ்வகையில் சிவகவிமாமணி தாம் நாளும் ஓதிய இறை நாமங்களை, திருவிளையாடல்களின் அற்புதங்களை ஏனையோரும் ஓதி இறைபதம் எய்தவேண்டும் என்னும் பெருவிருப்பால் இந்நூலினை ஆக்கித தந்துள்ளார்.

எம்பெருமானின் திருவிளையாடல்கள் ஒவ்வொன்றையும் சிறுவர்களும் ஓதிப் பயன்பெறும் வகையில் நூலாசிரியர் மந்திரரூபமாக்கி ஒவ்வொரு வரியினுள் அடக்கி 'இந்திரன் பழியைத தீர்த்தோய் நமஹ' என்று தொடங்கி 64மந்திரங்களாக இதனை அமைத்துள்ளார். அம்மந்திர வடிவின் பொருளை உணர்ந்து துதிக்கும் வகையில் அவற்றை 64போற்றிப் பாமாலைகளாக்கி இவர் உதவியுள்ளார்.

மேற்படி திருவிளையாடல்களைச சுருக்கித் தந்துள்ளமை படிப்போரைப் பக்திநெறியில் ஈர்த்துச் செல்லும சக்திவாய்ந்த சிறப்பம்சமாகும் - என்றார்.

விழா ஆரம்பத்தில் சங்கீத பூஷணம் திருமதி பிரானேஸ்வரி சிதம்பரப்பிள்ளையும், ஆசிரியர் துரைராசாவும் 'நமக்கு அர்ச்சனைபாட்டே' என்ற இறைவனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்பவர்கள்போல பாமாலைகளை இசையுடன் ஓதினர்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை தமது மதிப்புரையில்:-

சிவகவிமாமணி கதிர்காமத்தம்பி திருவிளையாடற் புராணத்தை நன்கு கற்றுத்தெளிந்து, அகத்திலே செய்து வந்த பூசையை இன்று நாமெல்லோரும் உணரும் வகை வெளியே செயலில் செய்து காட்டியுள்ளார். இதுவரை நாம் பார்த்த நூல் வெளியீட்டு விழாக்கள் போலன்றி, நூற்பயனை யாவரும் உணரும் வகை பூசையுடன் மந்திரங்கள், பாமாலைகளை ஓதுவித்துச் செயலிலே காட்டியுள்ளமை போற்றத்தக்கதொன்றாகும்.

பெயரைக்கேட்ட மாத்திரத்திலே முத்தியைக் கொடுக்கும் சிறப்பினையுடைய துவாதசாந்த தலமாகிய மதுரையிலே வீற்றிருந்தருளும் சோமசுந்தரப்பெருமானின் 64திருவிளையாடல்களையும் முதியோரும் சிறியோரும் விளங்கி ஓதிப் பயன்பெறும் வகையில் மந்திரரூபமாக்கியும் பாமாலைகளாக்கியும் தந்த கவிஞர் கதிர்காமத் தம்பிக்கு நாம் அளித்த 'சிவகவிமாமணி' என்ற பட்டம் சாலவும் பொருத்தமானதே - என்றார்.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தமது உரையில்:-

சிவகவிமாமணி தமது தள்ளாத வயதிலும் தமது அனுபவஞானம் பல அன்பர்கட்கும் பயன்பெற வேண்டும் என்னும் விருப்பால் எம்பெருமானின் திருவிளையாடல்களை மந்திர வடிவமாகவும், பாமாலைகளாகவும், கதைகளாகவும் ஆக்கித்தந்த பக்திமயமான 'திருவிளையாடற் பூசைப் பாமாலைகள்' என்னும் இந்நூலை ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளில் வைத்துப் பூசை செய்து வழிபடல் சாலவும் பயன்தருவதாகும் - என்றார்.

திருமதி மா.கதிர்காமத்தம்பி நன்றியுரை கூறினார். வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி தவமணிதேவி கணேசலிங்கம் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நூலாசிரியரை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.(எ)

### 'சிவகவிமாமணி' பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

வல்வெட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபரும் கவிஞருமான ஆ.கதிர்காமத்தம்பி 'சிவகவிமாமணி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் இவருக்கு இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். (எ)

# ஆசிரிய நூலகர்களுக்கு முகாமைத்துவப் பயிற்சி

## ஜூன் 10முதல் 14வரை நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த ஆசிரிய நூலகர்களுக்கும், கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய நூலகர்களுக்குமான நூலக முகாமைத்துவப் பயிற்சி எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி செயலமர்வு கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலகமும், தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானத்திற்குமான தேசிய நிறுவகத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக நூலகம், தேசிய நூலகம், புள்ளிவிவரத் திணைக்களம், மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் வளவாளர்களினால் நடத்தப்படவுள்ளது.

தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், கிளிநொச்சி ஆகிய வலயங்களைச் சேர்ந்த நூலக அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் தங்களின் ஆசிரியர்களை மேற்படி பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றுவதற்குத் தவறாது அனுப்பிவைக்கவேண்டும் என்றும் -

நூலக முகாமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்துகொள்வதற்கு பொருத்தமான தகுதிவாய்ந்த ஆசிரியர்களை அனுப்பிவைக்காத பாடசாலைகளுக்கு ஆசிரிய நூலகர் நியமனம் வழங்கப்படமாட்டாது என்றும் - உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அனந்தராஜ் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்குக் கடமை லீவுடன் உணவு, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

# ரஞ்சித் கொலை சந்தேக நபர்கள் அடுத்த சில தினங்களில் கைது!

கொழும்பு,ஜூன்6

தென்மாகாண சபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித் கொலை தொடர்பாக சகல சந்தேக நபர்களும் அடுத்த ஓரிரு தினங்களில் கைதுசெய்யப்பட்டுவிடுவர் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இக்கொலையின் பிரதான சந்தேக நபர் எனக் கருதப்படும் சூரியவெவ பகுதியைச் சேர்ந்த வீரக்கொடி அல்லது ராஹுல என்பவர் நுகேகொடையில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டதையடுத்தே ஏனைய சந்தேக நபர்கள் கைது செய்யப்படவிருக்கின்றனர்.

நுகேகொடையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகையிலேயே வீரக்கொடி கைதுசெய்யப்பட்டார். (ஐ)

# பிறவியெனும் பெரு நோயை நீக்கவல்ல அருமருந்து விபூதி

ஒவ்வொரு சமயத்திற்கும் சமயக் குறியீடுகள் உள்ளன. இவை அருவமாகவுள்ள கடவுளை அறிவுறுத்தி உணர்த்துவன. சைவசமயிகளுக்குரிய சமயச்சின்னங்களாக விபூதியும் உருத்திராக்கமும் விளங்குகின்றன. யாகங்கள் செய்கின்றபோது ஸ்மார்த்தர்களும் மத்வர்களும் ஹோமத்திலிருந்து எடுக்கப்பட்ட பஸ்மத்தை அணிகின்றனர். விபூதியைக் குழைத்து திரிபுண்டரமாக இட்டுக் கொள்வதற்கு வேதங்களிலே மந்திரங்கள் உரியவாறு கூறப்பட்டுள்ளன. இவ்விதம் நோக்கும்போது விபூதி வேத சம்பந்தமுடையது எனக் கொள்ளப்படுகின்றது.

"ஸ்ரீகரம்ச பவித்ரம்ச ரோக நிவாரணம் லோகே வசீகரம் புண்யம் பஸ் மத்ரைலோக்ய சாதனம்."

தூய்மையானதும் மங்களத்தைச் செய்யக் கூடியதும் நோய்களையும் துக்கங்களையும் போக்கக்கூடியதும் மேலானதும் மூவுலகத்திற்கும் சாதனமானதும் எல்லா உலகங்களையும் வசீகரிக்கக் கூடியதுமான தேனினும் இனிய திவ்ய மருந்து விபூதி என விபூதியின் பெருமையை மேற்குறிப்பிட்ட சுலோகம் விளக்குகிறது.

திருந்து, பசிதம், பஸ்மம், சாரம் இரஷை எனப் பல பெயர்கள் கொண்டு விபூதி குறிப்பிடப்படுகிறது. விபூதி, கற்பம், அனுகற்பம், உபகற்பம், அகற்பம் என நால்வகைப்படும். விபூதி தரிக்கும் முறையானது உத்தூளனம்,

### ஞானக்கதிர்

திரிபுண்டரம் என இரு வகைப்படும். மூன்று விரல்களால் பூசும் முக்குறிகள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கி ஞானம் பெறுவதைக் குறிப்பிடுவதாகும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் சிவஞான நெருப்பாற் சுட்டெரித்து புனித நிலையை ஆன்மா அடைவதே மானிட வாழ்க்கையின் பெரும் பயன் என்பதனை இது நினைவூட்டுகின்றது.

சி.சி.வரதராசா


குழந்தையின் நோய்க்குத் தாய் மருந்துண்பதுபோல, மலைபோல் குவிந்து கிடக்கும் நம் வினைகளை நாம் அணியும் நீறு மட்டும் பொடியாக்க போதாது என்று சிவபிரான் நம்மீது கொண்ட பெருங்கருணையினால் திருநீற்றை தம் உடலெங்கும் பூசுகிறார் என சிவபிரானின் பெருங் கருணைத்திறன் இயம்பப்படுகின்றது.

இவ்விதம் எல்லாச் சிறப்புகளும் பொருந்திய ஒளிமயமான, இலட்சுமி கடாட்ச, மங்களகரமான விபூதியைச் சைவ சமயத்தவர்களாகிய நாம் அணிந்து உள்ளன்போடு சமய வாழ்வினைக் கைக்கொண்டு மேன்மையடைவோமாக. ✦

## பிராந்திய இந்துமாநாட்டின் எழுச்சி நிகழ்வுக் காட்சிகள்



பச்சிலைப்பள்ளி இந்துப் பேரவையினால் பளை நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நடத்தபட்ட விசேட நிகழ்வில் பளைப் பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி, பிரதேச சபை செயலாளர் இ.து.சிவராசா, பளை அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோருடன் கலந்துகொண்ட பொதுமக்களைப் படத்தில் காண லாம். (எ-117)



வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற சமய எழுச்சி விழாவில் தமிழ்நாடு அறநிலையங்கள் வாரிய உறுப்பினரும் தெய்வீகப் பணி மகளிர் மன்றத் தலைவருமான புலவர் பொன்.தெய்வநாயகிசோதி 'சைவ நெறி காட்டும் அன்பு' என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவதைப் படத்தில் காணலாம். (எ-135)



உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் நடைபெற்ற எழுச்சி நிகழ்வில் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (எ)



நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற எழுச்சி நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (எ)

# வற்றாப்பளை ஆலயம் செல்வதற்கு விசேட போக்குவரத்துச் சேவை

## சிற்றூர்திச் சங்கங்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜுன்6

வற்றாப்பளை கண்ணகை அம்மன ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

இந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையத்தினால் விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின்படி யாழ்குடாநாட்டில் உள்ள 74 சிற்றூர்திச் சேவைச் சங்கங்களிலும் பக்தர்கள் முன்கூட்டியே பயணப் பதிவை மேற்கொள்ளலாம்.

பதிவுகளை மேற்கொள்வோர் இங்கிருந்து எதிர்வரும் திங்கட்கிழமை காலை அழைத்துச் செல்லப்படுவார்கள். பின்னர் அதேவாகனத்தில் மறுநாள் செவ்வாய்க்கிழமை மீண்டும் திருப்பி அழைத்து வரப்படுவார்கள்.

இவ்வாறு சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது. (ஒ-10)

### நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள்

யாழ்மாநகர சபையால் வருடாந்தம் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் தயாரிப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

11ஆவது மலராக அமையவிருக்கும் இம்மலருக்கு காலத்தின் தேவைக்கு ஏற்ற விதத்திலான ஆக்கங்களை துறை சார்ந்த கல்விமான்கள், அறிஞர்கள், சைவப் பெரியார்கள் பொதுமக்களிடம் எதிர்பார்ப்பதாகவும் -

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் படைப்புக்களை அனுப்பி உதவுமாறு - யாழ்மாநகரசபை சைவ சமய விவகாரக் குழு கேட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,ஜுன்6

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் வீனஸ் விளையாட்டுக் கழக அணியும், புலோலி இளைஞர் கழக அணியும் மோதுகின்றன (ஓ)

☆ ☆ ☆

வடமராட்சி,ஜுன்6

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 8ஆம்திகதி பிற்பகல் 2மணிக்கு அதிபர் ஆ.மகேஸ் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-173)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஜுன்6

அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன ஓட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை இடம்பெற உள்ளன.

நாளை காலை 6.00 மணிக்கு ஆண்களுக்கான 5மைல் வீதியோட்டமும் அதனைத் தொடர்ந்து ஆண்களுக்கான 25மைல் சைக்கிளோட்டமும் பெண்களுக்கான 10மைல் சைக்கிளோட்டமும் இடம்பெறவுள்ளன. அரியாலை காந்தி சன சமூகநிலைய முன்றிலில் இருந்து இப்போட்டிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஒ-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜுன்6

கொடிகாமம் மத்தி முன்பள்ளியின விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவர் ஏ.செல்வராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.பாக்கியராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-ரி)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் சுகாதார சேவைகள் மாகாணப்பிரதிப் பணிப்பாளரினால் கோரப்படுகின்றன.

(அ) வாகனத்தரிப்பிடம் அமைத்தல் (அளவு 16'X24')
(ஆ) யன்னல் வெளிகளிற்கு 3 மி.மீ தடிப்புள்ள கண்ணாடிகள் பொருத்துதல்.
(இ) குடி தண்ணீர்க்கிணறு ஆழப் படுத்தி குழாய் பொருத்துதல்.
} சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை.
(ஈ) அஸ்பெஸ்ரஸ் கூரைத் தகடுகள் - ஏழாலை, வைத்தியசாலை. பொருத்துதல்.

(02) ரூபா 50/= இனைக் கேள்விப்படிவப் பணமாகவும், ரூபா 100/=இனை மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாகவும் 17.06.2003 ஆம் திகதிக்கு முன் பண மனையில் செலுத்திப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

(03) 18.06.2003 முற்பகல் 10.00 மணிக்கு முன்பாகப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு சுகாதாரசேவைகள், மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வைக்கப்படல் வேண்டும்.

(04) கேள்விகள் 18.06.2003 முற்பகல் 10.00 மணிக்குத் திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

(05) மேலதிக விவரங்களை அலுவலக நாள்களில், நேரங்களில் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்தியகலாநிதி
சு.தா. சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(C/28276)


## எம் நெஞ்சங்களில் தெய்வமாய் ஆன ஐந்தாம் ஆண்டு நிறைவு நாள்

மனிதனாய் 17 - 05 - 1954



தெய்வமாய் 31 - 05 - 1998

திதி:சஷ்டி

**அமரர் காளிமுத்து தங்கவேல்**

ஆண்டுகள் பல செல்லலாம்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மோடுதான்!

வீரபத்திரர் ஒழுங்கை,
ஜி.பி.எஸ்.வீதி(G.P.S.),
கல்வியங்காடு.

அமரரின்
மனைவி, பிள்ளைகள்.

(18828)

# பேரினவாத அடக்கு முறையால் பாதிப்புற்ற வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்கான நிதி தமிழருக்காகவே செலவிடப்படவேண்டும்!

## கிராம உத்தியோகத்தர் சம்மேளனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்6

அரசியல், சமூக, பொருண்மிய ரீதியாக பேரினவாத ஒடுக்கு முறையினால் பாதிப்புற்ற எமது பிரதேசத்தின் புனர்நிர்மாணத்துக்குத் தரப்படும் நிதி முழுவதும் எமது மக்களுக்கே செலவிடப்படவேண்டும் என்பதில் இரண்டு வேறுபட்ட கருத்துகள் இருக்கமுடியாது.

வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 14 மாதங்கள் கடந்து விட்டன. இக்காலப பகுதியில் தென்னிலங்கைப் பொருள்களுக்கான ஒரு சந்தையாக வடக்கு-கிழக்குப் பிரதேசம் குறிப்பாக யாழ்ப்பாணம் மாறியுள்ளமை மட்டுமே நடந்த மாற்றமாகும்.

இந்நிலையில் வெளிநாட்டு நிதியுதவியின்றி 2003 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்க முடியாத வங்குரோத்து நிலையில் அரசு உள்ளது. இதனால் தான் டோக்கியோ மாநாட்டினையும் அதில் வழங்கப்படும் உறுதிகளையும் அரசு இன்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு பெறப்படும் நிதியுதவிகள் எங்கு செலவிடப்படும் என்பதே இன்றுள்ள முக்கிய வினாவாகும்.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கென வெளிநாட்டு உதவிகள் தரப்பட்டன. அந்த நிதி உதவி வடக்குக் கிழக்கிலேயே செலவிடப்படுகின்றது எனக் காட்டுவதற்காக வடக்கு-கிழக்கின் எல்லையில் உள்ள சிங்களக் கிராமங்களுக்கு அது செலவிடப்பட்டமை நாடறிந்த உண்மை. டோக்கியோ நிதியுதவியும் இவ்வாறே செலவிடப்படுமா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. இந்த நிதியில் மக்களுக்குச் செல்லப் போவது எவ்வளவு? அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் கைகளுக்குச் செல்லப்போவது எவ்வளவு?

இதுவரை காலமும் பதவிக்கு வந்த அரசுகளினால் தொடர்ந்தும் குதறப்பட்டு வந்த தமிழ் மக்களும் அவர்களது தாயகமும் செழுமைகாணவேண்டும். அதற்கு எமக்குத் தனித்துவமான நிர்வாகக் கட்டமைப்புத் தேவை. இதன் மூலமே தமிழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்யமுடியும். இல்லையெனில் தெற்கு வளரும். வடக்கும் கிழக்கும் மேலும் தேயும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

### சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜுன்6

தென்புலோலி தான்தோன்றி உபய கதிர்காமக்கந்தன் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை கந்த புராணப்படிப்பு ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 25ஆம் திகதி வள்ளியம்மன் திருக்கலியாணப் படிப்புடன் கந்தபுராணப் படிப்பு நிறைவு பெறும். (ஒ-173)

★ ★ ★

வேலணை மேற்கு பெரியபுலம் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன ஆரம்பமானது.

எதிர்வரும் 13ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுன்6

வண்ணார்பண்ணை ஓட்டுமடம் ஞானவைரவர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் அபிஷேகமும், அன்னதானமும் இடம்பெறும். (எ)

★ ★ ★

வடமராட்சி,ஜுன்6

முகாவில் திரியாய் அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் இப்பொங்கல் உற்சவம் நடைபெறுவதால் பெருமளவு பக்தர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-173)

★ ★ ★

கோப்பாய்,ஜுன்6

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து மஹோற்சவம் இடம்பெற்று எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ-72)

★ ★ ★

வரணி வடக்கு சிமிழ் அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும 9 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 9 நாள்கள் உற்சவம் நடைபெறும். (ஒ-70)

★ ★ ★

வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. தேர் உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதியும், தீர்த்த உற்சவம் 22ஆம் திகதியும் நடைபெறும். (ஒ-170)

★ ★ ★

வலி.தெற்கு,ஜுன்6

உடுவில் பெரிய குளத்தடி பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு அன்றையதினம் நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். (ஒ-152)

★ ★ ★

ஊர்காவற்றுறை,ஜுன்6

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 7.15மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-16)

★ ★ ★

அனலைதீவு குலமங்கை, பூனோன் மணி அம்பாள் ஆலய மஹோற்சவம கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறுகிறது.

எதிர்வரும் 13ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஒ-16)

# ஆசியக் கராட்டிப் போட்டியில் பருத்தித்துறை வீரர்கள் வெற்றி

வடமராட்சி,ஜுன்6

அஸ்ரஷர் ஆசியக் கராட்டிப் போட்டியில் பருத்தித்துறை ராஜாளி சோட்டகன் கராட்டி சங்க வீரர்கள் ஒரு தங்கப்பதக்கத்தையும் இரண்டு வெண்கலப்பதக்கங்களையும் வென்றனர்.

தளுவத்துக்கொடவில் இடம்பெற்ற இப்போட்டியில் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், ஹொங்கொங், மலேஷியா, இலங்கை ஆகிய நாடுகளைச சேர்ந்த கராட்டிச் சங்கங்களின் வீரர்கள் பங்குபற்றினார்கள்.

இப்போட்டிகளில் 80 கிலோவுக்கு மேற்பட்டோருக்கான கராட்டிப் போட்டியில் பருத்தித்துறை ராஜாளி சோட்டோகன் கராட்டிச் சங்கத்தைச் சேர்ந்த ஆர்.கணேசமூர்த்தி தங்கப் பதக்கத்தை வென்றார்.

60-65 கிலோவுக்கு இடைப்பட்டோருக்கான கராட்டிப் போட்டியில் பருத்தித்துறை ராஜாளி சோட்டோகன சங்கத்தைச் சேர்ந்த ரி.சிறீதரனும் 80 கிலோவுக்கு மேற்பட்டோருக்கான கராட்டிப் போட்டியில் இதே சங்கத்தைச் சேர்ந்த கே.சந்திரகுமாரும் வெண்கலப பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கராட்டிச்சங்கத்தினரால் 1982ஆம் ஆண்டு கொழும்பு கதிரேசன மண்டபத்தில் நடத்தப்பட்ட கராட்டிப் போட்டியிலும் கணேசமூர்த்தி பங்குபற்றி தங்கப்பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-173)


## தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (TITA)

இணுவில்

**க.பொ.த உயர்தரம் 2003 பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களே!**

உங்கள் காலத்தை பயனுள்ளதாக்கி எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

அனைவருக்கும் தமிழ் மூலம் கணனிக் கல்வி என்னும் நோக்குடன் இலவச பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

கணனி அறிமுகம் (3மாதங்கள்)

ஆரம்பம் 07.06.2003 காலை 10.00 மணி

பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.

Rural IT Center (TITA),
Inuvil East, Inuvil.

(18816)


## மரண அறிவித்தல்

**குமாரசுவாமி சுப்பிரமணியம்** (பிரபல சோதிடர்)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசுவாமி சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம்(04.06.2003) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசுவாமி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஞ்சித் (இத்தாலி), மஞ்சுளா, வரதபாஸ்கரன்(சமூகசேவை அலுவலர், பிரதேசசெயலகம், நெடுந்தீவு), சதேசபாஸ்கரன்(லண்டன்), காஞ்சனா(நியூசிலாந்து), ராஜபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கிரிஜா(இத்தாலி), சத்தியவரதன்(அதிபர், சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு), துயாளினி, சியாமினி(லண்டன்), ஜெகதீசன்(நியூசிலாந்து), ருசாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் குமரன், குகப்பிரியன், கஜந், காருண்யன், ரம்பியா ஆகியோரின் அன்புப் பேரனும் கதிர்காமத்தம்பி, நாகேஸ்வரி, செல்வராசா, விமலராணி, காலஞ்சென்ற வேலாயுதம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று, புதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

'ரவிமதி'
கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

தகவல்:
சு.வரதபாஸ்கரன் (மகன்)

(18827)



வடபிராந்திய
முச்சக்கர மோட்டார்
ஊர்த்திச்சேவைச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் தலைவர் திரு. இ.மனோகரராசா அவர்கள் தலைமையில் 07-06-2003 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல நோ.கூ.சங்க மண்டபத்தில் நடைபெறும்.

எனவே, யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலும் வாடகைச் சேவையில் ஈடுபடும் ஓட்டோ உரிமையாளர் - சாரதிகள் தவறாது கலந்துகொள்ளவும்.

முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். (18808)

நிர்வாகம்
ஓட்டோ சங்கம்

## முக்கிய அறிவித்தல்

இலங்கையில் தரமான உப்பினை உற்பத்தி செய்யும் ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் யாழ்.மக்களுக்கான உப்பு விநியோகத்தினை (பரதன் மல்ரி சேவிஸ்) "S.P.O. தனியார் விற்பனை நிறுவனத்தினூடாக மட்டுமே மேற்கொள்கிறது. எனவே, எமது தரமான உப்பு தவிர்ந்த தரங்குன்றிய பாவனைக்கொவ்வாத உப்பு வகைகள் எமது நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்டவையென கூறியும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையெனக் கூறியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சில முகவர்களால் விநியோகிக்கப்படுகின்றது. விற்பனையாளர்கள் பரதன் மல்ரி சேவிஸ் விற்பனை சிட்டையூடாக மட்டுமே கொள்வனவை மேற்கொள்ளுமாறும் அவ்வாறான கொள்வனவிற்கு மட்டுமே விற்பனைக் கழிவுகளும் முதன்மைப்படுத்தப்பட்ட சீரான விநியோகமும் மேற்கொள்ளப்படும் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

உப்பு உற்பத்தி நிறுவனம்,
(18813) ஆனையிறவு.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
உயர்திரு.நடராசா நவரத்தினராசா
அவர்களின் பாசமிகு சகோதரன்

### நடராசா செல்லத்துரை

அவர்கள் 04.06.2003 இல் மரணமடைந்த செய்திகேட்டு எமது பாடசாலை ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரும் மனம்கலங்கி நிற்கின்றோம்.

அவரது பிரிவுத் துயரால் வாடி நிற்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதுடன் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக்கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

யா/வரணி ம.வி,
வரணி. (18809)

ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி உஷாக்குமாரி திலகராஜன்

(முன்னாள் ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

யாழ்ப்பாணம் இல.71, இரண்டாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய திருமதி உஷாக்குமாரி திலகராஜன் 02-06-2003 அன்று கனடாவில் காலமானார்.

இவர் நடராஜா திலகராஜனின் அன்பு மனைவியும், பிறயனின் (Brian) அன்புத் தாயாரும், தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அதிகாரி - மீன்பிடி இலாகா), காலஞ்சென்ற புவனேஸ்வரி வேலுப்பிள்ளை ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற மாதகல் சின்னத்தம்பி நடராஜா (முன்னாள் உத்தியோகத்தர், பண்டத்தரிப்பு M.P.C.S. ), திருமதி திலகவதி நடராஜா (முன்னாள் உத்தியோகத்தர் - கிராமிய வங்கி பண்டத்தரிப்பு) ஆகியோரின் மருமகளும், பிரேமகுமார் (ஜேர்மனி), சுரேஸ்குமார் (கனடா), பிரதீப்குமார் (கனடா), திருமதி ஆஷாக்குமாரி சுரேந்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி பத்மநாதனின் பெறாமகளும், பாலசிங்கம் (ரஜினி கீறிம் ஹவுஸ்), துரைசிங்கம் (முன்னாள் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தற்போதைய ஆலோசகர் UNICEF/ W.F.P) ஆகியோரின் மருமகளும், சுரேந்திரா (Saba Stords), திருமதி காபி (Gabi), பிரேமகுமார் (ஜேர்மனி), திருமதி விஜயராணி, சுரேஸ்குமார் (கனடா), திருமதி ரஜனா பிரதீப்குமார் (கனடா), திருமதி திலகராணி மகாலிங்கம் (கனடா), நேரு (லண்டன்), பாரதி (கனடா), திருமதி இந்திரா சிறிநவா (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07-06-2003 சனிக்கிழமையன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
Mrs.ASHA KUMARY SURENDRA,
66, WOODINGTON AVENUE,
TORONTO, ONTARIO,
M4C3J5, CANADA.
T.P. 416.469 3266.

தகவல்:-
மா. சுரேந்திரா
(மைத்துனர்)
T.P.2225880.

(18807)

## வாழ்வியல் நெறி குறித்த கருத்தரங்கு

வட்டுக்கோட்டை,ஜுன்6

சுழிபுரம் மேற்கு, தொல்புரம்மேற்கு சமுர்த்தி அலுவலர்களும் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும் இணைந்து நடத்தும் வாழ்வியல்நெறி பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தநிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் பற்றிய விளக்கங்களும் இடம்பெறவுள்ளன. (ஒ-160)

## பட்டப்பகலில் மாடுகள் அபகரிப்பு

மேய்ச்சலுக்காக வயல்வெளியில் கட்டப்பட்டிருந்த இருமாடுகள் பட்டப்பகலில் திருட்டுப் போயுள்ளன.

நேற்றுமுன்தினம் வல்லிபுரக் குறிச்சியில் இத்திருட்டு இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கணபதி கிட்டிணன் என்பவரின் மாடுகளே இவ்வாறு திருட்டுப்போயுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-173)

## படிவம்

2004 ஆம் ஆண்டில் அரசினர் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான விண்ணப்ப படிவம் உண்டு.

முடிவு திகதி 30-06-2003

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS,
430, K.K.S ROAD, JAFFNA.
(சி-28268)

## தவறிவிட்டது

பாப்பையா கடையடிக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் நாவலர் வீதியில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள

இ. கமலநாதன்,
219.கோயில் வீதி, நல்லூர்.
(T.P. 5884-0777-110164)

எனும் முகவரியில் ஒப்படைத்து தவவும்.

சன்மானம் வழங்கப்படும். (18811)

# வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரிய இடமாற்றத்திட்டம்

## விரைவில் செயற்படுத்தப்படும்

வலிகாமம்தெற்கு,ஜுன்6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையிலான இடமாற்றத்திட்டமொன்று விரைவில் செயற்படுத்தப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது.

பல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள், ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் ஆகியோருக்கு பற்றாக்குறை நிலவுகின்.

இந்நிலையில், தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் மற்றும் தேசியக் கல்வியியற் கல்லூரியில் பயிற்சிபெற்று வெளியேறும் ஆசிரியர்கள் போன்றோரின் நியமனங்கள் ஆகியவை இடம்பெறவுள்ளன. இந்த நியமனங்களைத் தொடர்ந்தே இடமாற்றத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

ஆகவே, பாடசாலை அதிபர்கள் தமது ஆசிரிய ஆளணிக்கு அமைய தமக்குத் தேவையான ஆசிரியர்களின் விவரங்களை கோட்ட கல்வி அதிகாரிகள் மூலம் வலிகாமம் கல்வி வலயத்துக்குச் சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

யாழ். மாவட்ட
தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
Jaffna District private Lorry Owner's
Co-Operative Society (Ltd.)

## விசேட பொதுக்கூட்டம்

எதிர்வரும் 07-06-2003ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தலைவர் திரு.இ.அரிகரன் அவர்கள் தலைமையில் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான விசேட பொதுக்கூட்டம் ஒன்று சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. எனவே, சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (18806)

க.சின்னத்தம்பி
செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி

தாதியர் பயிற்சிப் பாடசாலையில் போதனாசிரியராகக் கடமையாற்றும்
திருமதி சோதிமலர் கருணைலிங்கம்
அவர்களின் தாயார்

### திருமதி சாந்தலிங்கம் முத்தம்மா

04.06.2003 இல் காலமானதையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சந்தியடையப் பிரார்த்திக்கும்:

தாதியர் நலன்புரிச்சங்கம்.
(18814) யாழ்.போதனா வைத்தியசாலை.





வெற்றி எண்கள்

07 25 26 31 44

போனஸ் எண் 48

ஜக்பொட் பரிசு

ரூபா.2,328,800/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,328,800/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 101 | 10,000/- | 1,010,000/- |
| 3 | 5,272 | 500/- | 2,636,000/- |
| 2 | 89,383 | 20/- | 1,787,660/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 07ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 110,172 | 10/- | 1,101,720/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,645,380/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 3,181,750/-

தொடர் இல. 3680921க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஜுன் 07ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
பஸ் நிலையம் (முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
தங்கப்பரிசு வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2684964-2-39
2687219-2-27
2694857-8-79
2687112-6-53
2684172-1-28

PHOENIX OWW.

# இனத்தின் மேன்மைக்கு மாணவர்கள் தமதாற்றலால் வழிகோல வேண்டும்!

**தமிழீழ மாணவர் எழுச்சிநாள் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

இன்று நாம் விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் நின்றுகொண்டிருக்கிறோம்.

முதலில் இந்த விடுதலை உணர்வு, யாருக்கு, எப்போது, ஏன்வந்தது? இளைய தமிழ்த் தலைமுறையினரின கல்வி வழி முன்னேற்றத்தில் எப்போது அழுத்தமும், அதிகாரமும், ஆக்கிரமிப்பும் தலைகாட்டத் தலைப்பட்டதோ அன்றே மாணவர் உள்ளத்தில் விடுதலை உணர்வு கொழுந்துவிட்டு எரியத்தொடங்கியது.

அந்த உணர்வு ஆரம்பத்தில் உள்ளொளி பரப்பிய சாத்வீகமாக ஒளிர்ந்து சட்டமறுப்பாகச் சுவாலை விட்டு; மாவீரன் உரும்பிராய் சிவகுமாரனால் பொறிபறக்கச் செய்யப்பெற்று, வீரம், மானம், உறுதி, தற்கொடை என்ற அர்ப்பணங்களுடன் முன்னெடுக்கப்பட்டது. நம்புதற்குரிய வீரர் பலர் தம் நல்லுயிர் ஈந்துள்ளனர்.

**வீரப்பெருந்திறல் கூட்டம்**

மாணவர்களாக இருந்தவர்கள் காணரும் வீரர் கூட்டமாக எழுந்தனர். இவனா இப்படி வீரனானான்! இவனா இப்படிச் சாதனை செய்தான்! இவனா இப்படிப் பெருமை பெற்றான்! இவனா இதைக் கண்டுபிடித்தான்! என்று வியக்கும் வகையில், களத்திலும், நிலத்திலும காரியம் ஆற்றுகிறார்கள். இந்த உணர்வு எதனால் வந்தது? தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தமிழின விடுதலைக்காய்த் தலைப்பட்டதால் வந்தது.

ஒல்லாந்து தேசத்தைக் கடல் கொண்டு போகாமல் காத்த வீரச் சிறுவனைப்போல் இனமான உணர்வு கொண்ட இளம் தலைமுறையால் இது சாத்தியமானது.

ஒவ்வொரு மாணவருக்கும் ஏதோ ஒரு வகையில் ஒவ்வோர் ஆற்றல் இருக்கிறது. அந்த ஆற்றல் எந்த வகையில் எமது இனத்துக்கு உதவும் என்று எண்ணித் துணிந்து பங்களிப்புச் செய்யவேண்டும்.

"ஒளிபிழந்த நாட்டிலே நின்றேறும் உதய ஞாயிறொப்ப" ஒவ்வொரு மாணவனும் தன் ஆற்றல்களைக் கதிர்களாக வீசி, இனத்துக்காய் ஒளியைப் பெருக்கியும் பரப்பியும் வரவேண்டும்.

**மாணவரின் பங்களிப்பு**

சோம்பல், பொறுப்பின்மை, சுயநலம் என்பவற்றைவிட்டு, ஒளிபடைத்த கண்களோடும், உறுதிகொண்ட நெஞ்சினோடும், தெளிவு பெற்ற மதியினோடும் கல்விக்கு ஏற்பட்டுள்ள தடைகளைத தாண்டி தேர்வுகளிலும், பிற கல்விசார் போட்டிகளிலும் சாதனை படைக்க மாணவர் உறுதி பூணவேண்டும். இந்தப் போர் அனர்த்தத்தால் அற்றாராகவும் அலர்ந்தாராகவும் இருப்பவர்களுக்கு உதவ மாணவர்கள் முன்வரவேண்டும். பாடசாலைகளில் உள்ள கழகங்கள், மன்றங்கள் மூலம் சிரமதானம், இரத்ததானம் மற்றும் பராமரித்தல் தொண்டுகளில் ஓய்வு நேரங்களைச் செலவிடுதல் வேண்டும். கல்வி அறிவு கைவரப்பெறாத மக்களுக்கு படிப்பகங்கள் வைத்துக் கல்வி புகட்டவேண்டும். நாடகங்கள், நடனங்கள், கூத்து வகைகள், கட்டுரைகள், நுண்கலைகள், கவிதைகள் மூலம் நமது கலையையும் பண்பாட்டையும் வளர்க்கவேண்டும்.

தமிழ் மொழியையும் அதன் தூய பயன்பாட்டையும் வளர்க்கும் விதத்தில் எழுத்திலும். பேச்சிலும் 'எல்லாம் தமிழ்' என்ற கோட்பாட்டையும் முன்னெடுக்கவேண்டும். பொது அறிவை வளர்ப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். நமது தேசிய விளையாட்டுக்களை விருத்தி செய்ய வேண்டும், பொழுது போக்கிற்காக வீட்டுத் தோட்டம், பயனுள்ள பிராணிகளை வளர்த்தல், நடமாடும் நூலகங்களை அமைத்தல், தருணத்திற்கேற்ற உபகரணங்களைச் செய்தல், கையெழுத்து ஏடுகளை உருவாக்குதல் என்பவற்றில் ஈடுபடவேண்டும். வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் வகையில் சுயமுயற்சிகளில் ஈடுபட்டுக் குடிசைக் கைத்தொழில்களை வளப்படுத்த வேண்டும் ஏதோ வகையில் ஒவ்வொரு குடும்பமும் தன் நிறைவைப் பெறும் வகையில் பெற்றோர்க்கு உதவுதல் வேண்டும்.

**பாரிய பொறுப்பு**

கற்ற கல்வி எல்லா வகையிலும் பிறந்த பொன்னாட்டிற்கும் தாய் மொழிக்கும், இனத்திற்கும் பயன்படும் வகையில் இந்த மண்ணில் காலூன்றி நின்று இன்பத்திலும், துன்பத்திலும் பங்குகொள்ளவேண்டும் என்ற உணர்வு மாணவர்களுக்கு ஏற்படுமாயின் நாம் விடுதலையின் பயனை அனுபவிப்பவர்களாக வாழ்வது நிச்சயம். இதுவே மாணவர்கள் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்.

"மலர்கள் அரும்பாக இருக்கும் போது வண்டுகள் ரீங்காரம் செய்து வருவதில்லை. அவை மலர்ந்து தேன நிறைந்து மணம் பரப்பும்போது தான் வண்டுகள் அவற்றை நாடிவருகின்றன. அதேபோல் நல்ல எண்ணங்கள் செயலாகும் போதுதான் புகழ் மனிதனைத் தேடி வருகின்றது." விடுதலையை நோக்கிய எண்ணங்கள் மலர்த்துப்படும்போது நாடும், மொழியும், இனமும் புகழ்பெற்று வாழும். ★

**நா.க.சண்முகநாதபிள்ளை**

---

# மாதகல் - பெரியவிளான் வீதியை சீரமைத்துத்தரக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜூன்6

மாதகலிலிருந்து பெரியவிளான் சந்திவரை உள்ள வீதி கடந்த 12 வருட காலமாக பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாதுள்ளது. வீதிக்கருகாமையில் முன்னர் இராணுவத்தினர் அமைத்திருந்த மண அணை (பண்ட்) உள்ளது. இதனால் அங்கு மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இவ்வீதியின் பெரும் பகுதி வயல வெளி காணிகளுக்கு ஊடாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த வயல் காணிகளுக்கு விவசாயிகள் மாட்டு வண்டில், லான்ட் மாஸ்ரர், உழவு இயந்திரம் போன்றவற்றை விவசாய தேவைகளுக்கு இவ்வீதி வழியாக கொண்டு செல்லமுடியாதுள்ளது. அத்துடன் மாதகலிலிருந்து பெரியவிளான, இளவாலை ஆகிய இடங்களுக்குச் சென்று வருபவர்கள் பண்டத்தரிப்புச் சந்திக்கு ஊடாக மேலதிக தூரம் பிரயாணம் செய்தே செல்லவேண்டியுள்ளது.

செடிகள், பற்றைகள் வளர்ந்தும் பலத்த சேதமடைந்துமுள்ள இவ் வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற மாதகல் விவசாயிகள் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்திலும் இவ்வீதியை விவசாயிகள் நலன்கருதி புனரமைப்புச் செய்துதருமாறு கோரும் தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

---

# இடப்பெயர்வால் வறுமையில்வாடும் மாணவர்களுக்கு உணவு கிடைக்காததால் பாடசாலையில் மயங்கி விழும் பரிதாபம்!

## ஆசிரியர் சமூகம் வேதனையுடன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்6

இடப்பெயர்வால் ஏற்பட்ட வறுமை காரணமாக மாணவர்கள் பலர் காலை உணவு உண்பதில்லை. அத்தகைய மாணவர்கள் பாடசாலைகளில் மயங்கி விழும் பரிதாபம் நிகழ்கிறது.

வலிவடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது தனியார் காணியொன்றில் இயங்கிவரும் பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் இவ்வாறு வேதனை வெளியிட்டுள்ளனர்.

யாழ்பல்கலைக்கழக மாணவர் அணி ஒன்று இப்பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடியதாகவும் -

அப்போது ஆசிரியர்கள் மேற்கண்டவாறு தெரிவித்ததாகவும் -

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது பாடசாலை தனியாருக்குச் சொந்தமான காணியில் இயங்கி வருகிறது. இதனால் பாடசாலைக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் பல வருடமாக இயங்கி வருகிறது. பல தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு அதில் வகுப்பறைகள் இயங்குகின்றன. மழை காலத்தில் தற்காலிக கொட்டகைகள் ஒழுகுவதால் அக்காலப் பகுதியில் வகுப்பறை வெள்ளக்காடாகக் காட்சியளிக்கிறது. இதனால், மழை காலத்தில் எமது கல்வி தடைப்படுகிறது. எமது பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து முகாம்களிலேயே தங்கியுள்ளனர். அங்கு கல்வி கற்கும் சூழல் இல்லாததால் இரவில் மாணவர்கள் எவரும் படிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

"எங்களுக்கு என்று ஒரு விளையாட்டு மைதானம் இல்லை. அதனால் நாம் இன்னுமொரு பாடசாலை மைதானத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் பயிற்சிகளைப் பெறவேண்டியுள்ளது. இதனால் இரு பாடசாலை மாணவர்களுமே பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. வறுமை காரணமாக நமது பாடசாலையில் பல மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் பாடசாலைக்கு வருகின்றனர். அவர்களில் பலர் மயங்கி விழும் நிலை உள்ளது. பலர் பாடசாலையில் இருந்து இடைவிலகிச் சென்று கூலித் தொழில் செய்து வருகிறார்கள்.

எமது பாடசாலையில் ஆய்வுகூட வசதி இல்லாததால் கற்றல் செயற்பாடுகளில் பல இடர்களை கல்வியில் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

- இவ்வாறு ஆசிரியர்களும், மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர் அணியிடம் மேலும் கூறியதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஒ)

---

# மேலாதிக்க சக்திகளின் யோசனைக்கு செவிசாய்ப்பதை அரசு நிறுத்தவேண்டும்!

## புதிய ஜனநாயகக்கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன்6

வல்லரசு மேலாதிக்க சக்திகளின் ஆலோசனைகளுக்கு, செவி சாய்த்து நிற்பதை அரசு கைவிடவேண்டும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கின் புனரமைப்பு, புனர்வாழ்வு, மறுசீரமைப்பு, மீள்குடியமர்வு உள்ளிட்ட அடிப்படை மனிதாபிமானத் தேவைகளை முன்னெடுத்து நிறைவு செய்வதற்கு அர்த்தமுள்ளதும் அதிகார வரம்புகளை உடையதுமான நிர்வாகக் கட்டமைப்பு தவிர்க்க இயலாத இன்றைய தேவையாகும். அத்தகைய நிர்வாகக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகளின் பங்களிப்பு நிராகரிக்கமுடியாத யதார்த்தமும் ஆகும். இவ்விடயத்தில் புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள கோரிக்கையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயங்கள் நிறைவாக காணப்படுகின்றன.

அதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள ஆலோசனையானது 'யானைப் பசிக்கு சோளப் பொரி' கொடுப்பது போன்றதாகும். இதன் மூலம் சிதைந்து, அழிந்து காணப்படும் வடக்கு - கிழக்கை மீளக் கட்டியெழுப்ப முடியாது. எனவே பிரதமரும், அரசும் அர்த்தமுள்ளதும் நடைமுறைச் சாத்தியம் மிக்கதுமான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை காலம் தாழ்த்தாமல் உருவாக்குவதற்கு முன்வரவேண்டும். இப்பொழுது புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ள சாதகமான அம்சங்களும் சமாதானச் சூழலும் வலுவிழந்து போய்விடக்கூடும் என்றே மக்கள் அஞ்ச வேண்டியுள்ளது. அத்தகைய அபாயநிலைக்கு நாட்டையும் மக்களையும் கொண்டுசெல்ல வேண்டாம் என்று புதிய ஜனநாயகக் கட்சி பிரதமரையும் அரசையும் வலியுறுத்தி நிற்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், தடைகள் நீக்கம், பாதை திறப்பு என்பன அரசமைப்புடன் முரண்படாத வகையிலேயே முன்னெடுக்கப்பட்டதுடன் மக்கள் அனைவரது ஆதரவையும் பெற்றுக்கொண்டன. அத்தகைய வழிமுறைகளைப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு, மறுசீரமைப்பு இயல்பு வாழ்வுக்கான அர்த்தம் நிறைந்ததும் புலிகள் இயக்கம் பங்களிப்பு வழங்கத் தக்கதும் ஜனநாயக அம்சங்கள் கொண்டதுமான நிர்வாகக் கட்டமைப்பை பிரதமரும் அரசும் விரைந்து உருவாக்கி செயற்படுத்த முன்வர வேண்டும்.

பேச்சைத் துணிவோடும் தூர நோக்கோடும் எதிர்கொண்டு முன்னெடுத்து வைத்த கால் அடிகளை பின்னோக்கி வைக்காது தற்போது எழுந்துள்ள முட்டுக்கட்டையான சூழலை விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும், பிரதமரும் அரசும் அணுகித் தீர்வுகாண முன்வர வேண்டும். இந்த வேண்டுகோளையே புதிய ஜனநாயகக்கட்சி விடுக்கின்றது என்றுள்ளது.

(ஒ-10)

---

# செய்திக் கொத்து

### வீதி சேதம்

யாழ்ப்பாணம், ஜூன்6

ஊரிக்காடு - நாவலடி வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத காரணத்தினால் அவ்வீதியூடான போக்குவரத்து மிகவும் சிரமமானதாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு பலவித கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் இன்னும் அது மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-185)

### குடிதண்ணீர் குழாய் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன்6

யாழ்.மாட்டின் ஒழுங்கையில் உள்ள குடிதண்ணீர் விநியோகக் குழாய் கடந்த சில தினங்களாக பழுதடைந்து காணப்படுகிறது. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ம-10)

### நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன்6

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மலசலகூடங்கள் அமைப்பதற்கென ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் திருமதி எம்.கு.குமாரகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (ம-10-170)

### திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன்6

வாலிகண்டிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு மூன்று வீடுகளில் திருட்டுப் போயுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திருட்டுச் சம்பவத்தில் பணம், நகைகள் என்பன திருட்டுப் போயுள்ளன. (ம-10-70)

### கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்6

இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து காலை 8.30 மணிக்கும், மருதனார்மடம் சந்தியில் இருந்து மாலை 4மணிக்கும் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளுமாறு வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பொது முகாமையாளரிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-10-152)

### நாய் கடித்தது!

யாழ்ப்பாணம், ஜூன்6

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குச் சென்ற பொதுமகன் ஒருவரை அங்கு நின்ற வளர்ப்பு நாய் கடித்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. (ம)

### எள்விளைச்சல் அமோகம்

சுழிபுரம், ஜூன்6

சுழிபுரம் பகுதியில் எள் விளைச்சல் அதிக பயனைக் கொடுத்துள்ளது. ஒரு கிலோ எள் 60 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் வெள்ளை எள்ளுடன் உள்ளூர் எள்ளையும் கலந்து எண்ணெய் வடிக்கப் பயன்படுத்தப்படுவதால் எள்ளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. (ஓ-28)

### யாழ்.பிராந்திய ஆணையாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன்6

யாழ்பிராந்திய ஆணையாளராக திருமதி பத்மினி சிவலிங்கம் கடந்த முதலாம் திகதியில் இருந்து நியமனம் செய்யப்பட்டுள்ளார். முன்னர் பிராந்திய ஆணையாளராகக் கடமையாற்றிய கலாநிதி க. குணராஜாவின் ஒப்பந்தகாலம் பூர்த்தியானதை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-10)

### உருவப்படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூன்6

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் தாவீது அடிகளாரின் உருவப்படம் கடந்த 31ஆம் திகதி திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சங்கத் தலைவர் கலாசூரி ஆர்.சிவகுருநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்தார். (ம-10-30)

### திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூன்6

பாஷையூர் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புனித அந்தோனியாரின் திருச்சொரூப கட்டடத்தில் கடந்த புதன் கிழமை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் அப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரும் கலந்துகொண்டனர். (ம-10-70)

சுவிஸ்

கனவு நனவாகியது!

**VIJI'S PARTY SERVICE**

நாவற்குழியில் 03. 04. 2003இல் நடைபெற்ற நேர் முகப்பரீட்சையில் தெரிவானவர்களில் முதலாவது அதிர்ஷ்டசாலி-

மாரிமுத்து தபேந்திரன்
பூதர்மடம்
கோப்பாய் வடக்கு
*(ஏனையோரின் பெயர்களை எதிர்பாருங்கள்!)*

மீண்டும் நாவற்குழியில்
07.06.2003

சுவிஸ் பிரசை - எந்திரி
அந்தராஸ் குருசோ
அவர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடலாம்.!

அன்போடு அழைப்பவர் -

கதிர்காமநாதன் விஜயநாதன்
(நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அருகில்)

KATHIRGAMANATHAN
VIJAYANATHAN
MANNEDORF - SWISS

(சி-28285)


## ஒத்துமாறுதல்

தென்கிழக்கு (ஒலுவில்) பல்கலைக்கழகத்தில் 2002/2003 கல்வியாண்டில் பொருளியல் சிறப்புத் தெரிவில் அனுமதிகிடைத்து பயின்று கொண்டிருக்கும் மாணவரொருவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் அதேபிரிவை அல்லது கலைப்பிரிவைச்சேர்ந்த மாணவருடன் ஒத்துமாற விரும்புகிறார். அவ்வாறு ஒத்துமாற விரும்பும் மாணவர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

விளம்பர இல-1920
உதயன்,
யாழ்ப்பாணம். (18824)

## தவறிவிட்டது

மீசாலை தெற்கைச் சேர்ந்த ஐயாத்துரை நவரத்தினம் என்பவரது ஜேர்மன் அடையாள அட்டை, சாரதிய லைசன்ஸ் உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மீசாலை வாகையடி சந்திக்கும் கனகன்புளியடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி நகரசபையில் ந. இராசதுரையிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(C/28278)

## மூன்றாண்டு மலரஞ்சலி



தோற்றம் 25.07.1932 — மறைவு 07.06.2000

**சின்னத்துரை கனகசபை**
(முன்னாள் இராணுவ அதிகாரி)

மூண்டதோர் நெஞ்சின் சோகம்
முனைப்புற வளர்ந்து பொங்கி
நினைப்பினில் என்றும் நணியாத்
துயர் மூழ்கித் தவிக்கின்றோம் ஐயா.

*'ஈஸ்வரி இல்லம்'*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

(18825)

மனைவி பரமேஸ்வரி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உ
சிவமயம்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

எமது குடும்பத் தெய்வம்

**கந்தையா ஆறுமுகம் (ஆசிரியர்)**



அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனவைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு மிக உருக்கமாக அழைக்கின்றோம்.

இடம்:- நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபம்
காலம்:- 08.06.2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மு.ப.11 மணி

(தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்)

*28,கைலாசபிள்ளையார் கோயில்வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (18826)

தங்கள் அன்பு
ஆறுமுகம் ஆசிரியர்
குடும்பத்தினர்.

## 20 தமிழ் அகதிகள் மன்னாருக்கு வந்தனர்

சென்னை,ஜூன்6

தமிழக அகதி முகாமிலிருந்து 20 இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்பியுள்ளார்கள்.

கடந்த செவ்வாயன்று இவர்கள் படகில் மன்னாருக்கு வந்து சேர்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆறு குடும்பங்களைச் சேர்ந்த எட்டு ஆண்களும், ஆறுபெண்களும் நான்கு குழந்தைகளும் உட்பட20 பேரே இவ்வாறு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களது சொந்த இடங்களுக்கு மிகவிரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூன்6

ஜப்பான் மாநாட்டில் புலிகளைப் பங்குபற்றச் செய்வதற்கு அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளைக் கண்டித்து ஜே.வி.பியினர் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்

கொழும்பு ரயில் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டமும், பொதுக் கூட்டமும் இடம்பெறவிருப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது. (ஐ-12)

## நேர்முகப்பரீட்சை

உத்தியோகப்பற்றற்ற கணக்காய் வாளர்களுக்கு கூட்டுறவுப்பரிசோதகர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்குரிய கடிதங்களை உரியவர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-6)


**G.A.Q., B.A PART-I**

யாழ், பேராதனை
தமிழ் - க.தர்மராஜா
புவியியல் - K. கிரிதரன்
அரசியல் - S. சுபாஸ்கரன்
இ.நாகரிகம் - K. சத்தியதாசன்

2003, 2004 - G.A.Q.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.
07.06.2003 8 மணி

நியூட்டன் யாழ்.நகர்
ஆரியகுளம் சந்தி
(18835)

**லிபேட்டி** அச்சுவேலி



விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த
சொக்கத்தங்கம் (தீலஸ்)
11.00, 3.00, 7.00 (பி.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்

8 ஆம் திகதிவரை விஜய், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த



புதிய கீதை
(C/28271)

BEHIND ENEMY LINES
இரவு 7.00,9.30 மட்டும்.(War Film)

**நிறைஞ்சனாஸ்**

இன்று முதல்
பிரசன்னா, கவிதா மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
(f)பைவ் ஸ்ரார் (தீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
THE ROCK THE SCORPION KING

**நாகம்ஸ்** சுன்னாகம்

சத்தியராஜ். சீதா. தலைவாசல் விஜய். வினுச்சக்கரவர்த்தி நடித்த
மாறன் (தீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேட காட்சி 7.00 (பி.நே)

**லஷ்சுமி** சினிமா
இணுவில்

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா. நாகேஸ். வி.கே.இராமசாமி நடித்த
இரகசியப் போலீஸ் 115 (தீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(18772)


## இணைந்துள்ள வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக் கட்டமைப்பை வழங்குவது பற்றிப் பரிசீலனை செய்யலாம். மற்றப்படி இல்லை என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த வேளையிலேயே வடக்கு - கிழக்கு இணைப்பை நீக்கி, இரண்டு மாகாணங்களையும் முன்னர் போல தனித்தனி மாகாணங்களாக்குவதற்கு ஜனாதிபதி உறுதி அளித்தார் என்று பிக்குமார் சங்கப் பிரதிநிதிகள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைக் கோரும் புலிகளின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1983 இனக் கலவரத்தின் பின்னர் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு 1987 ஜூலை 29 ஆம் திகதி அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, அந்நாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்.

அந்த உடன்படிக்கைப்படியே வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரே மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இணைப்புக்குச் சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பதற்காக ஒரு விசேட ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இணைப்பு தொடர்ந்து இருக்க வேண்டுமா அல்லது வடக்கிலிருந்து கிழக்கு பிரிந்து தனியாக இருக்க வேண்டுமா என்பதைக் கிழக்கு மாகாண மக்கள் தீமானிப்பதற்கு 1988 டிசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கிழக்கிலே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற விதி உடன்படிக்கையில் புகுத்தப்பட்டிருந்தது. இணைப்பு என்றும் தொடர்ந்து இருக்க வழி செய்யும் விதத்தில் ஜனாதிபதி விரும்பினால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமலும் விடலாம் என்ற விதியும் கூடவே சேர்க்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது ஆயுட்காலம் வரை சர்வஜன வாக்கெடுப்பை நடத்தாமலே விட்டுவிட்டார்.

அவருக்குப் பின்னர் வந்த ஜனாதிபதி பிரேமதாஸ, ஜனாதிபதி விஜேதுங்க ஆகியோரும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றி சிந்திக்கவில்லை. அதனால் வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்ந்து இருந்து வருகிறது.

கிழக்கின் இணைப்பை உடைத்து அவற்றைத் தனித்தனி மாகாணங்களாக்குவேன் என்று உறுதி அளித்தார் என்கிறார்கள் பிக்குமார் சங்கத்தினர்.

வடக்கிலிருந்து விடுபட்டு கிழக்கு தனி மாகாணமாக இருக்க வேண்டும் என்ற குரலை இப்போது அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளரும் அமைச்சருமான அதாவுல்லாவும் பலமாக ஒலித்து வருகிறார்.

பிக்குமாருக்கு ஜனாதிபதி அளித்தார் எனக் கூறப்படும் உறுதிக்கும் அதாவுல்லாவின் குரலுக்கும் சம்பந்தம் உண்டா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் பலமாக எழுப்பப்பட்டு வருகிறது. (ஐ)

## குடும்ப பொது உளவளத்துணையாளருக்கான பயிற்சி நெறி

1. மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
2. பயிற்சிக் காலம் - ஒருவருடம்
   பயிற்சி நாள்கள் - சனி, ஞாயிறு மு.ப-9.00-பி.ப.2 மணி வரை
3. கல்வித்தகைமை - க.பொ.த.உயர்தரம் சித்தி
   சமூகசேவை, உளவியலில் நாட்டம்
4. பயிற்சிக் கட்டணம் - 4,000/=

சுயவிவரமடங்கிய விண்ணப்பப்படிவத்தை 15-06-2003 இற்கு முன்

இயக்குநர்
"அகவொளி"
குடும்பவளத்துணை நிலையம்
சென்,பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு நேரில் அல்லது அஞ்சலில் அனுப்பிவைக்கவும்.

(சி-28283) - இயக்குநர்.

## துரித ஆங்கிலப் பயிற்சி நெறி

க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியுடன் க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்ற பாடசாலை விலகியோர்க்கான துரித ஆங்கிலப்பயிற்சிநெறி ஒன்றினை நடத்துவதற்கு தெல்லிப்பழைக் கோட்ட அதிபர் சங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி தகைமை பெற்றோர் தமது பெயர், விவரங்களை 18.06.2003 இற்கு முன் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

*தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம்.* (18833) -அதிபர்சங்கம்

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

எமது குடும்ப ஒளி விளக்கு
**கந்தசாமி ஜெயசிங்கம்**

07.05.2003 இல் இறையடி எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கு கந்தசாமி ஜெயசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.06.2003) வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அத்தாய்,*
*அல்வாய் கிழக்கு.* (C/28284)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பாலச்சந்திரன் ராகவன்**

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் பூதவராயர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் ராகவன் நேற்று (05.06.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாலச்சந்திரன் - நாகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் விக்கினேஸ்வரன்(லண்டன்), யாமினி, தாரணி, கிரிஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரவிந்தனின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கந்தையா இரத்தினம், காலஞ்சென்ற அருளம்பலம் சின்னம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.06.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 52/1, பூதவராயர் வீதி (சட்டநாதர்வீதி) நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*52/1,பூதவராயர் வீதி,*
*நல்லூர்.* (18836)

தகவல்:
க.பாலச்சந்திரன
(தந்தை)


**துரித புகைப்படப் பிரதியாக்கம்**

உங்கள் புகைப்படச் சுருள்களை உடனுக்குடன் மிகத்தரமாக பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ள
(18820) மூர்த்தி ஸ்ருடியோ & கலர்லேப், யாழ்வீதி,மானிப்பாய்.

இடைக்கால கட்டமைப்பு தொடர்பாக

# அரசு - புலிகள் இடையே பெரிய இடைவெளி ஏற்பட்டுவிடவில்லை

## ஜப்பான் புறப்பட முன்னர் ரணில் பேட்டி

கொழும்பு,ஜூன்6

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால கட்டமைப்பு தொடர்பான விடயத்தில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே அதிக இடைவெளி ஏற்பட்டுவிடவில்லை.


பிரதமர் ரணில் விக்கிரமசிங்க் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்தபேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின மாநாட்டுக்காக ஜப்பான் புறப்படுவதற்கு முன்பாக அவர் இந்தப் பேட்டியை வழங்கியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

கருத்து முரண்பாடுகளால் தடைபட்டிருக்கும் சமாதானப்பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு அவசியம். சர்வதேச சமூகத்தின் ஆதரவு இன்றி வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்யமுடியாது.

பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட பிறகு சமாதான முயற்சிகள் அதன் உச்சத்தை எட்டமுடியாது தடைப்பட்டுள்ளன. என்றாலும் சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் உறுதியாகவே இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எங்களுக்கு இடையில் அதிக இடைவெளி ஏற்பட்டுவிடவில்லை. தங்களுக்கு அதிகளவு பங்கும், அதிகாரமும் வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கேட்கின்றனர். நாங்கள் அதற்கு இணங்கியுள்ளோம். அரசைப் பொறுத்தவரை ஓர் இடைக்கால கட்டமைப்பு பற்றி அதிக சிரத்தைகொண்டுள்ளது. அவர்கள் கேட்பதற்கும் அரசு சிந்திப்பதற்கும் இடையே பெரிய வித்தியாசம் இருப்பதாக எனது பார்வைக்குத் தெரியவில்லை.



ஒரு விடயத்துக்குத் தீர்வு காண வேண்டுமானால் நாங்கள் பேசவேண்டும். கடிதங்கள் குறிப்புக்கள் மூலம் மட்டும் நாங்கள் தீர்வுக்கு வந்து விட முடியாது.

தெற்கில் அதிகார வர்க்கத்தின் உச்ச பிடியும், வடக்கில் ஒரு கட்டமைப்பும் இல்லாமல் இருப்பதுதான் புதிய ஒரு திட்டத்தைத் தேட வேண்டிய அவசியத்தை எமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

எனது அரசு திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்தும் என்பதை உதவி வழங்கும் நாடுகளுக்கு நம்பவைப்பது முக்கியமாகும். நிதி உதவியைப் பயன்படுத்துவதில் இலங்கை கடந்த காலத்தில் திறமையாகச் செயற்படவில்லை. இதனை மாற்றி திறமையாகச் செயற்படக் கூடிய கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் எமது அரசு திறமையாக உழைத்து வருகிறது.

- இவ்வாறு அந்தப் பேட்டியில் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

### மேலும் மூவர் அடையாளம் காணப்பட்டனர்!

கொழும்பு,ஜூன்6

உடதலவின்ன படுகொலை வழககில் குற்றம் சாட்டப்பட்டிருந்த மேலும் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் உடதலவின்ன கொலை வழக்கு விசாரணை நேற்று மீண்டும் ஆரம்பமான போதே சாட்சியால் மூவர் அடையாளம் காட்டப்பட்டனர்.

நான்காம், ஐந்தாம், எட்டாம் சந்தேக நபர்களை சாட்சியமளித்த றோகண குருகேஅடையாளம் காட்டினார்.

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று கொலை செய்யப்பட்டோர் பயணித்த வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகச் சாட்சி தெரிவித்துள்ளார்.

வழக்கு இன்றும் தொடர இருக்கிறது. (ஐ-12)

### ரோக்கியோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பி வரும் பிரதமர் தம்பதிகள் அங்குள்ள விகாரையில் நடைபெறும் வைபவத்தில் பங்குபற்றுவார்கள்.

- மாநாட்டில் பங்குபற்றும் அரசாங்கக் குழுவில் இடம்பெறும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் இரவே ஜப்பான் பயணமானார்.

மத்திய வங்கியின் ஆளுநர் ஏ.எஸ். ஜயவர்த்தன சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேர்னாட் குணதிலக்க ஆகியோரும் அமைச்சர் பீரிஸுடன் ஜப்பான் சென்றிருக்கின்றனர். அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.

உலகின் 34 பிரதான நாடுகளினதும் 15 சர்வதேச அமைப்புகளினதும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்குபற்றுவர். (ஐ)

## கோட்ட மட்டங்களில் நடந்த உதைபந்தாட்டப் போட்டிகளில் ஸ்கந்தா, அருணோதயா சம்பியன்கள்

வலி.வடக்கு ஜூன்6

கோட்ட மட்டங்களில் இடம்பெற்ற உதைபந்தாட்டப்போட்டிகளில் ஒன்றில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மற்றொன்றில் அளவெட்டி அருணோதயக்கல்லூரி அணியும் சம்பியன்களாகின.

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே தேசிய உதைபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 14 வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கந்தரோடை ஸ்கந்தரோதயக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 3இற்கு ஒன்று என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இதேவேளைதேசிய உதைபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் 14 வயதிற்கு உட்பட்டோருக்கான பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை கல்விக்கோட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மைதானத்தில் மோதிக் கொண்டன.

இவ்வாட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி 3இற்கு 0 என்ற கோல் கணக்கில் யூனியன் கல்லூரியைத் தோற்கடித்தது. (ஒ86)

### தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டங்களுக்கான நிகழ்வுகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்திலும் வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தென மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கலலூரி மைதானத்திலும், தீவகத்தில் வேலணை மத்திய கல்லூரியிலும் மாணவர் எழுச்சி தின நிகழ்வுகள் நடைபெறும்.

எழுச்சி ஊர்வலங்களில் கண்கவர் பாண்ட் வாத்திய அணி வகுப்புகளும் இடம்பெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இன்று மாலை நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் 'தமிழீழ விடியல் இசைக் குழுவின்' இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஐ-10-173-31-6)

### யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சிகளின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தார். சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறும் அவர் உத்தரவிட்டார். சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி ஸ்ரீராஜேஸ்வரன் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். சடலம் நேற்றுமாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மரணத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

இதேபோன்று கடந்த 2 ஆம் திகதியும் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் மட்டக்களப்பைச சேர்ந்த இளைஞர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9-8)

### முழுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச சமூகம் வழங்கும் நிதியை எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்காகப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கும் போது நிதியை பெறுவதற்காக ரோக்கியோவுக்கு நாம் ஏன் செல்லவேண்டும் என்று தமிழ்ச் செல்வன் கேள்வி எழுப்பினார்.

உதவி வழங்கும் நாடுகள் வழங்கும் நிதியைப் பயன்படுத்த அதிகாரம் உள்ள - சட்டவலுவுள்ள - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பையே நாம் கோரினோம். இந்தக் கட்டமைப்பை வழங்க முடியாத நிலையில் ரணிலின் அரசு உள்ளது. இக்கட்டமைப்பை ஏற்படுத்தி, கிடைக்கின்ற நிதியை எமது மக்களுக்கும் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசு உருப்படியாக எதையும் செய்யவில்லை. நாம் உதவி வழங்கும் மாநாட்டில் பங்குகொள்ளாமைக்கான முழுப் பொறுப்பையும் அரசுதான் ஏற்க வேண்டும் என்று தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மேற்கொண்டுவரும் திட்டங்களுக்கு தமது அமைப்பு பூரண ஆதரவு வழங்கும் என்று தமிழ்ச் செல்வன் மொஜானியிடம் தெரிவித்தார்.(ஐ-3)


ENGLISH

பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்பு

LECTURE

By: NISHANTHAN

(Dip. in ENGLISH)

குறிப்பு: பல்கலைக்கழக ஆங்கில பாடத்திட்டத்திற்கு ஏற்ப வகுப்புகள் நடத்தப்படும். அத்துடன் கடந்த கால வினா - விடை வகுப்புகளும் நடைபெறும்.

இரு இடத்தில் ஆரம்பம்: 07-06-2003

பொருளியற் கல்லூரி

யாழ். நகரில் – 12.00 p.m. (ம.நே.)

இணுவிலில் – 11.00 p.m. (ம.நே.)

☆ முதல் வகுப்பில் உங்கள் வசதிக்கேற்ப நேரம் தீர்மானிக்கப்படும். (சி-28251)

COMPUTER COURSES

Batch III June 14th 2003

Time: 10.00 a.m.

பிரிவு III இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களின் அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

இயக்குநர், IIS, யாழ்ப்பாணம். (சி-28269)

BRIGHTMAN

(கிளை நிறுவனம்)

நாவலர் றோட், யாழ்ப்பாணம.

A/L 2004 — கணக்கீடு, கிரயக்கணக்கீடு — sat.,sun.: 7.00- 8.00 a.m.

A/L 2005 — முடிவுக்கணக்கு — sat.,sun.: 3.00- 5.00 p.m.

BY.A .கலைச்செல்வன் (18777)

BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2003 — பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பௌதிகம் PAPER CLASS (18776)

By: ஜெயசீலன் — SAT 7.30 a.m.

ஆரம்பம்: 07.06.2003

IPAS

Institute of professional Accounting Studies

2003/2004 கல்வியாண்டுக்கான புதிய பிரிவுக்கான விரிவுரைகள் 07.06.2003 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

aat stage I&II

Chartered Accountancy Foundation

CIMA (UK) Foundation

மேலதிக விவரங்களுக்கு

IPAS

199,main street, Jaffna.

Contact mobile: 0777 563294, 0777 563292, 0777 164966, 0777 270452 (C/28231)

ENGLISH CLASSES

English Classes are Conducted by Mr.K.C.Sivasubramaniam - A veteran English teacher of rich and varied experience in the teaching of English, Latin, French.

Classes Commence on 14.06.2003 at Saraiyady Lane, Puloly South, Puloly.

Please contact

Mr.S.Sivapathasundaram.

Saraiyady Puloly South, Puloly for entrolment .Entrolment Fee - Rs.100/-.

K.C.Sivasubramaniam. (C/28267)

பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி நிறுவனம்

எந்தப் பிரதேசத்திலும் தொடர்புகொள்ளக்கூடிய முறையில் மேசைத் தொலைபேசிகள் இணைப்புகளுடன் வழங்கப்படும்.

IDD அழைப்புக்களுக்கு 1 நிமிடம் 25/=

உத்தரவாதம் உண்டு!

உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்

எமது அங்கீகாரம் பெற்ற முகவர்கள்:

- மிது கொம், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 021-5560, 021-5686, 0777-720139
- விஜய் வீடியோ சென்ரர், புங்குடுதீவு. 071-399113
- குட்டி, பண்டத்தரிப்பு 071-399208
- திருப்பதி தொலைத் தொடர்பு நிலையம் 0777-722914, 070-213352, 021-5940, 021-5732
- வ. அரவிந்தன், சுழிபுரம், 0777-550949
- சண் தொலைத் தொடர்பு நிலையம், திக்கரை, காரைநகர். 070-213190, 071-299264
- பவர் தொலைத் தொடர்பு நிலையம், நெடுந்தீவு 071-381193, 071-381187
- சொலெக்ஸ் ஒப்றிகல், 100, கண்டிவீதி, சாவகச்சேரி. 0777-855328
- ஆர். தயாகரம், வட்டுக்கோட்டை 0777-244524
- ஆர்.ஆனந்தன், கலைவாணி வீதி, சித்தன்கேணி.
- சுதன் தொலைத்தொடர்பு நிலையம், மிருசுவில். 0777-584596
- இந்திரா தொலைத்தொடர்பு நிலையம், நயினாதீவு, அனலைதீவு. 071-793226

எமதுதொடர்புகளுக்கு: POWER CELLULAR, 1st Fleat,185,KASTHURIYAR ROAD, JAFFNA.(வின்னர் ரியேட்டருக்கு முன்பாக நியூ லலிதா கட்டடம்)

071-399220, 0777-242416, FAX-071-381125, E.mail-Power @ c/.LK


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.